கு.ப
4654

ஜே. எம். சாலி

# சாயல்

843.12
சாலி
SC IPR

தமிழ் மன்றம்

அகில இந்திய முஸ்லிம் லீக்
தமிழ் நாட்டுக் கிளையின் தலைவர்
சிராஜுல் மில்லத், அல்ஹாஜ்
ஆ. கா. அ. அப்துஸ் ஸமத், M.A., M.P.
அவர்களின் கருத்தில்

# சாலி திறமைசாலி



'அன்னை பூமி' முடிந்தவுடன், அடுத்த தொடர் கதையைப் பற்றி அறிவிப்பு இல்லாதது வாசகர்களுக்குப் பல ஐயங்களை எழுப்பி இருந்தது என்பதை அலுவலகத்திற்கு வந்த கடிதங்கள் எடுத்துக் கூறுகின்றன......

சிறுகதைகளோ, நெடுங்கதைகளோ படைப்பதில் திறமைசாலியெனப் பேர் பெற்ற 'சாலிஹ்' அவர்களிடம் இரண்டு நாட்களில் ஒரு தொடர் கதை வேண்டுமென்றோம். சிறுகதை எழுதக் கூட போதாத காலத்தில் தொடர்கதை வேண்டுமெனக் கேட்கும் தைரியம் நமக்கு இருந்தது. அப்படியே தருவதற்குரிய ஆற்றல் அவருக்கு இருந்தது.

'அன்னை பூமி' இருந்த இடத்தில் 'சாலிஹ்' அவர்கள் பருவக் கொடிகளைத் தழைக்க விட்டிருக்கிறார். கதாசிரியரைப் பற்றிய முழு அறிமுகம் பிறிதொரு சந்தர்ப்பத்தில் வைத்துக் கொள்ள இருக்கிறோம். 'பருவக்கொடிகளின்' ஒவ்வொரு தளிரும் அவர் யார் என்று சொல்லவில்லையா?

— மணிவிளக்கு, ஏப்ரல் 1979.

---

The author whose modern writing in a Tamil weekly has become quite popular, has not succumbed to the 'formula' type of story-telling.

— The Hindu, Madras.


கு.க.எ. 62

நூ.ப
4654

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
53
பதிவு இல. 10. 5. 1956
14805
இல. 7. 6. 1968

# சாயல்

ஜே. எம். சாலி, எம். ஏ.

தமிழ் மன்றம்
கல்ஹின்னை, கண்டி.

CHAAYAL
(Short Stories)

by J. M. SALI, M.A.

(C) Copyright reserved

First published in May 1983

Thirteenth publication of:

**THAMIL MANRAM**
Galhinna, Sri Lanka.

Printed at:

**Developrint**
69, Albion Road, Colombo-9.
Phone: 597856

# சிறுகதைச் சிற்பி

பாவலர் திலகம்
எஸ். எம். ஜைனுதீன், B. Sc., B. Ed.
(பட்டர்வொர்த், மலேசியா)

இஸ்லாமும் இன்பத் தமிழும் வளர்க்கும் இன்றைய எழுத்தாளர்களில் 'சிறுகதைச் சிற்பி' என்னும் சிறப்பிற்குரியவர் ஜே. எம். சாலி எம். ஏ.

தமிழ் முஸ்லிம் கதாசிரியர்களில் இப்பொழுது பிரபலமாக இருப்பவர் யார்?

'அறமுரசு'—தமிழக இதழில் இடம் பெற்ற கேள்வி இது.

'ஜே. எம். சாலிதான். ஆனந்தவிகடன் வாசகர்களில் பலர் இவரை பிராமணர் என்று நினைத்துக் கொண்டு விடுகிறார்களாம். சாலி ஐந்து வேளையும் தவறாமல் தொழுகிறார்.

இவ்வாறு பதிலளித்தார் 'அறமுரசு' ஆசிரியர்.

'நண்பர் ஜே. எம். சாலி ஆனந்தவிகடன் பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றுகிறார். சுவையான கதைகளை எழுதுகிறார்- முன் எப்போதும் ஒரு முஸ்லிம் எழுத்தாளர் தமிழ்நாட்டின் பிற சமுதாய மக்களிடையே பிரபலமடையாத அளவுக்கு பிரபலமடைந்திருக்கிறார்.

ஜே. எம். சாலியின் 'விலங்கு'— சிறுகதைத் தொகுப்பிற்கு எழுதிய மதிப்புரையில் 'அறமுரசு' இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. சாலியின் எழுத்துலக வரலாற்றைப் படிப்போர் இப்பாராட்டிற்கு அவர் முற்றிலும் உரிமையானவர் என்பதை ஏற்றுக் கொள்வர்.

இலக்கியக் குடும்பத்தில் பிறந்தவர் ஜே. எம். சாலி. மூத்த தமையனார் பெருங் கவிஞர். 'இபுனு ஜமாலுத்தீன்'—இப்புனைப் பெயரில் இன்றும் பக்திமணம் கமழும் இனிய கவிதைகளைப் படைப்பார். காலஞ் சென்ற 'சிந்தனைச் சிற்பி'

ஜே. எம். ஹுசேன் பி. ஏ. (ஜேயெம்) சிறந்த கதாசிரியர். இவர்களின் தூண்டுதலின் பேரில் பத்திரிகை படிக்கும் பழக்கத்தை பயிரிட்டார் இளம் சாலி, 1955ம் ஆண்டு பத்தாம் வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலம். 'கண்ணன்' பத்திரிகை 'பாலர் கவியரங்கம்' பகுதியை அறிமுகம் செய்திருந்தது. அதில் பாடல்கள் எழுதிக் கொண்டிருந்த சாலி 'தேர்தல்' என்ற சிறுகதையை அதே ஆண்டில் படைத்து கதாசிரியராகப் பரிணமித்தார். கலைமகள் நிறுவனம் குழந்தைகளுக்காக நடத்திய 'கண்ணன்' சாலியின் சிறு கதைகளுக்கும் தொடர் கதைகளுக்கும் சங்கப் பலகை போல இடமளித்துக் கொண்டிருந்தது. 'கண்ணன்' நடத்திய நாவல் போட்டியில் 'இரு கண்கள்' பரிசு பெற்று சாலியை, ஆசிரியர் ஆர்வியின் அன்பிற்குரியவராக்கியது. 1958ல் ஆர்வி, கதாசிரியரை இவ்வாறு அறிமுகப்படுத்தி இருந்தார்.

'கிராமத்துச் சூழ்நிலையில் அழகான தமிழ் நடை கொண்டு எழுதப்பட்ட இவருடைய கதைகள் மாதுளம் முத்துக்கள் போன்றவை. அத்தனைக் கட்டுக் கோப்பாகவும் கனிரசம் கொண்டதாகவும் இருக்கும். இவர் மேன்மேலும் தொடர்ந்து எழுதி இஸ்லாமிய சமூகத்தில் ஒளிவிளக்காகத் திகழ வேண்டும் என்பதே நம் ஆசை.

ஆர்வியின் ஆசை வீண் போகவில்லை. 1958-ம் ஆண்டு ஆனந்த விகடனில் சாலியின் 'நெருப்பு' முதல் சிறுகதையாக இடம் பெற்றது. அதே ஆண்டு ''முஸ்லிம் முரசு'' நடத்திய சிறு கதைப்போட்டியில் பற்றுக்கோடு முதல்பரிசைப் பெற்றது.

கும்பகோணம் அரசினர் கல்லூரியில் 1960-ல் பி. ஏ. முதல் வகுப்பில் தேறி சென்னை மாநிலக் கல்லூரியில் எம். ஏ. தமிழ்ப் பிரிவில் சேர்ந்தார் சாலி. நான் புதுக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம் அது. தமிழ் முரசில் உமறுப் புலவர் பரம்பரை தொடரில் சாலியின் தமையனார் ஜே. எம். அபூபக்கர் (இபுனு ஜமாலுத்தீன்) அவர்களைப்பற்றி திறனாய்வு செய்து கொண்டிருந்தேன். ஜே. எம். ஹுசைன் எனக்குப் பெருந்துணையாய் இருந்தவர். இவர்கள் மூலம் ஜே. எம். சாலிஹ் எனக்கு அறிமுகம். 'பிறை' 'மணி விளக்கு' போன்ற இதழ்களில் இவருடைய சிறு கதைகள் வந்த வண்ணம் இருந்தன. ஒரே பல்கலைக்கழகத்தில் படித்த நாங்கள் இலக்கிய நண்பர்களானோம். 1962 ம் ஆண்டு எம். ஏ. முதல் வகுப்பில் தேறி மத்திய அரசின் கணக்காயர் பணிமனையில் சேர்ந்தார். இந்தச் சமயத்தில் சாலியின் முத்திரை கதைகள் ஆனந்த விகடனில் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. 'பொன் விளக்கு' சுழந்தை நாவல், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பரிசைப் பெற்றதும் இந்தக்காலக் கட்டத்தில்தான்.

1964-ம் ஆண்டு தமிழ் முரசு ஆசிரியர் குழுவில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். சாலியும் தமிழ்முரசு பணிமனைக்கு வந்தார். முஸ்லிம் முரசு ஆசிரியர் அல்மர்ஹூம், எஸ். அப்துல் ரஹ்மான் முயற்சியின் பேரில் தமிழ் முரசில் பணியாற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். தமிழ் வேளின் அரவணைப்பில் பத்திரிகையாளராக உருவெடுத்த சாலி 1971ல் 'ஆனந்தவிகடன்' துணை ஆசிரியரானார். விகடன் ஆசிரியர் எஸ். எஸ். பாலன், ''இதயம் பேசுகிறது'' மணியன் இருவரின் அன்பும் நல்லெண்ணமும்தான் இதற்குக் காரணம் என்று நன்றியுணர்வோடு கூறுகிறார் நாவலாசிரியர். தமிழ்வேளின் தூண்டுதலின் பேரில் 'இஸ்லாமும் தமிழும்' ஆராய்ச்சித் தொடரை எழுதினார். தற்கால இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் என்ற ஆராய்ச்சியை முன்பே முஸ்லிம் முரசில் செய்திருந்தார் சாலி. தமிழகத்தில் இருவரும் பயின்று கொண்டிருந்த போது இஸ்லாமியத் தமிழ்ச்சுடர் அறிஞர் ஆர். பி. எம். கனி 'இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்'' தயாரித்துக் கொண்டிருந்தார். இன்றைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை ஆயும் பணிக்குப் பொருத்தமானவர் சாலி என்ற முடிவுக்கு வந்தார். முதுபெரும் தமிழ் முஸ்லிம் எழுத்தாளர் இருவரும் இலக்கியச் செய்திகளைத் திரட்டும் பணியில் இறங்கினோம். அதன் பயன் சாலியின் அருமையான ஆராய்ச்சிப் படைப்பு. தமது இலக்கியக் கருவூலத்தில் இதுபற்றி நன்றிப் பெருக்கோடு குறிப்பிட்டுள்ளார் ஆர். பி. எம். கனி. இஸ்லாமியத் தமிழ்ச் சிறுகதை பற்றிய ஆய்வு முஸ்லிம் முரசு ஆண்டு மலரில் வந்தது. நாவல் இலக்கியம் பற்றியும் பல்வேறு சமயங்களில் கட்டுரைகள் படைத்துள்ளார் சாலி.

'இரு கண்கள்', ''தங்கக் கிளிகள்'' இரண்டும் சாலியின் குழந்தைகளுக்கான நாவல்கள், சிங்கப்பூர் பின்னணியில் பிறந்தது. ''அலைகள் பேசுகின்றன'' என்ற குறுநாவல் விகடனில் எழுதப்பட்டது. மூன்று பதிப்பும் விற்பனையாகி விட்ட விழுப்பத்திற்குரியது.

''72 பக்கத்தில் ஒரு காவிய அந்தஸ்துக்கு கதையை உயர்த்தி இருக்கிறார் ஆசிரியர்'' என்று மறைந்த எழுத்தாளர் ந. பிச்சமூர்த்தி 'தினமணி'யில் விமர்சித்திருந்தார்.

'கனாக்கண்டேன் தோழி' விகடனில் தொடர் கதையாக வந்தது. பலரின் பாராட்டிற்குரிய நவீனம். இதில் கிராமியச் சூழலும், அதனோடு ஒன்றிவிடுகின்ற மனித உள்ளங்களின் எழுச்சிகளும் ஏக்கங்களும் சிறப்பாகக் காட்டப்படுகின்றன. இப் புதினம் ஒரு புதுமையான முடிவைக் காணுகிறது.

'சொல்லித் தெரிவதில்லை' 'மலர் மஞ்சம்', 'முள்ளும் மலரும்' சாலியின் மற்ற நாவல்கள், 'விலங்கு' சிறுகதைத் தொகுதி. கலைமகள், 'ஹிந்து' போன்ற இதழ்கள் இத்தொகுப்பிற்காக சாலியை பாராட்டியுள்ளன.

'உலக வீரர் அலி' 'வீரர் அலியின் வெற்றிக்கதை' 'புரூஸ் லி வரலாறு', 'புரூஸ்லியின் தற்காப்புக் கலை' 'புரூஸ்லியின் புரட்சிப் படங்கள்', 'புரூஸ்லியைக் கொன்றது யார்?' 'இடி அமின்' —இவை ஜே. எம். சாலியின் வாழ்க்கை வரலாற்று நூல்கள். இவர்களைத் தமிழில் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்கே உரியது.

'குமுதம்'—கேள்வி பதில் பகுதியில் ஒரு கேள்வி:—

'முகம்மது அலியும் இடி அமீனும் சந்தித்தால் என்ன பேசிக் கொள்வார்கள்?

ப: ஜே. எம். சாலியைப் பற்றி. இந்த அளவிற்கு சாலியின் நூல்கள் பிரபலமாயின.

மாநபியின் இயற்கை மருத்துவம் இஸ்லாமியத் தமிழுலகிற்கு சாலி அளித்த அரும் விருந்து.

சிறுகதை, நாவல் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் சாலி, ஆரம்ப காலத்தில் கவிதை வெறிபிடித்தவராக இருந்தார். தமிழக வானொலிக் கவியரங்குகளில் இருவரும் பங்கேற்ற நினைவு இன்னமும் பசுமையாக இருக்கிறது. சிலப்பதிகார வரிப்பாடல்கள் குறவஞ்சி, பள்ளு, கலம்பகங்களின் சந்தப் பாடல்கள் ஆகியவை இவருடைய கவிதை வேகத்திற்கு அடிப்படையாக அமைந்தன. தேவைக்காகப் பாவைப் பயன்படுத்துவதென்று வரையறுத்துக் கொண்ட சாலி இந்தத் துறையில் தீவிரமாய் ஈடுபடவில்லை.

சிறுகதை, நாவல் இவை சாலியின் இருகண்கள். தரமான இலக்கியம் படைக்க வேண்டும் என்ற தாகம் இவருக்குண்டு. தமது படைப்பாற்றல் பற்றி சாலி இவ்வாறு கூறுகிறார்.

'பெரும் எண்ணிக்கையில் எழுதிக்குவிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இல்லை. ஒரு கட்டம் வரையில் அத்தகைய ஆசை இருப்பது இயற்கை. ஆனால் வாசகர்கள் எழுத்தாளனைப் புரிந்து கொண்டு இவனிடம் நல்ல படைப்புகளை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை வைக்கத் தொடங்கிய பிறகு எண்ணிக்கையை விட தரத்தில் கவனம் செலுத்த வேண்டியது படைப்பாளியின் கடமையாகி விடுகிறது. அப்பொழுது ஒரு பயமும் வந்துவிடுகிறது.'

இப்பொழுதெல்லாம் சாலி கற்பனைக் கதைகள் எழுதுவதைக் குறைத்துக் கொண்டிருக்கிறார். பாதிக்கு மேற்பட்ட கதைகளில் உண்மைச் சம்பவங்கள் தேவையான சிறுசிறு மாற்றங்களுடன் எழுதப்படுகின்றன. 'இருப்பதை இனிய வடிவத்தில் சொல்வது தானே இலக்கியம்!' இது சாலியின் கேள்வி!

இவருடைய முஸ்லிம் சிறுகதைகளில் இன்றைய சமுதாயத்தின் குறைபாடுகளையும் தேவையில்லா பழக்க வழக்கங்களையும் எடுத்துக் காட்டுகிறார் கதாசிரியர். ஒளிவு மறைவு இல்லாமல் தம் இன மக்களின் கோபதாபங்களையும் ஏமாற்றுக்களையும் சித்தரிக்கிறார் சிறுகதைச் சிற்பி.

முஸ்லிம் குடும்பக் கதையோடு நின்றுவிடாமல் பல பின்னணிகளில், பல சூழ்நிலைகளில் எழுதி வருகிறார் சாலி, இலங்கை, சிங்கை, மலைநாடு, அந்தமான் போன்ற இடங்களிலும் இவருடைய சிறுகதைகள் உருவாகின்றன. 'அனுலாவின் படகு' இலங்கைச் சூழலில் எழுந்த விகடன் முத்திரைக் கதை. 'வேலி' சிங்கப்பூர் பின்னணியில் பிறந்தது. 'மின்னல்' அந்தமான் தீவில் பளிச்சிடுகிறது.

அகிலனின் 'கதைக்கலை' இலக்கியத்திற்கு அருமையான சான்று சாலியின் கதைகள். 'சிங்கை,மலேசியாவில் சிறுகதை வளர்ச்சி ஆய்வு செய்யும் பேராசிரியர் அமீர் அலி, சாலியின் படைப்பிலக்கியத் திறனைப் பாராட்டுகிறார். சிந்தனைத் தெளிவு, சீர்திருத்தப் போக்கு, நீரோடை போன்ற நடை உள்ளதை உரைப்பதில் ஓர் உன்னதமான போக்கு, கற்பனை வளம், கருத்துக் குவியல் அனைத்தும் நிறைந்த அமர இலக்கியங்களைப் படைக்கும் சாலி, தற்காலத் தமிழ் இலக்கியத்தில் தகுந்த இடத்தைப் பெறவேண்டும்.

இவருடைய திறமைக்கு குமுதத்தின் மற்றொரு கேள்வி பதிலே போதுமானது.

கே: ஜே. எம். சாலியைப் பற்றி சில வரிகள்...?

ப: 'புத்திசாலி!'...

(சிங்கப்பூர் ''தமிழ் நேசன்'', ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 30, 1980ல் பிரசுரித்த கட்டுரை)

## பதிப்புரை

சிறுகதை இயல் பெருமைப்படக்கூடிய விதத்தில் அழகழகாக சிறுகதைகளை அமைத்து தமிழகத்தில் வெளிவருகின்ற பிரபல சஞ்சிகைகள் அனைத்தையும் தனது படைப்புக்கள் அலங்கரிக்கச் செய்தவரான சிறுகதை மாமன்னர் ஜே. எம். சாலி எம். ஏ. அவர்கள் எழுதிய சிறுகதைத் தொகுதியொன்றை, முதன் முதலில் இலங்கையில் வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

''கனாக் கண்டேன் தோழி'' எனும் நாவல் எழுதி தமிழ்நாடு அரசாங்கத்தின் பரிசு பெற்றுள்ள பிரபல' எழுத்தாளரான ஜனாப் சாலி பல துறைகளிலும் தன் கைவரிசையைக் காட்டியுள்ளார். இஸ்லாமிய இலக்கியம், தமிழக தர்காக்கள் பற்றியெல்லாம் நூல்கள் எழுதியுள்ள அவர், குத்துச் சண்டை வீரர் முஹம்மது அலி, கால் பந்துக்காரர் பெலே, புரூஸ் லீ போன்றோர் பற்றியும் எழுதியிருக்கிறார்.

'சிறுகதைச் சிற்பி' என்றும் அழைக்கப்படுகின்ற ஜனாப் சாலியின் முழுக்கைவண்ணம் காணப்படுபவைகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் தொகுப்புத்தான் 'சாயல்'. பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அமுத மொழிகளை அடிப்படையாக வைத்து இக்கதைகள் புனையப்பட்டுள்ளதனால், அவை மேலும் சிறப்புப் பெறுகின்றன. கதைகளில் வரும் கருத்துக்கள் மனதில் ஆழப் பதியக்கூடிய ஆற்றொழுக்கான நடையில் ஒவ்வொரு கதையும் எழுதப்பட்டிருப்பதனால், 'மீண்டும் ஒரு முறை படித்தாலென்ன' எனும் எண்ணத்தை மனதில் எழுப்பி, பல முறைகள் திருப்பித் திருப்பிப் படிக்கும்படி தூண்டுகின்றன. 'சாயல்' நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது.

இந்த நூலில் பிரசுரமாகியுள்ள கதைகளை முன்னர் வெளியிட்ட சஞ்சிகைகள் மறுபிரசுரம் செய்வதற்கு அனுமதித்தமைக்கு எமது நன்றி. இலங்கையில் தனது சிறுகதைத் தொகுதியை வெளியிட எமக்கு வாய்ப்புத்தந்த ஜனாப் சாலி அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

27/1. Beach Road,
Mount Lavinia.
25. 04. 1983.

எஸ்.எம். ஹனிபா

# தீர்ப்பு 1

ஆபத்துக்குப் பாவமில்லை!

காரணம் சொல்லி ஷகீலாவை அழைக்கிறார்கள்.

காலையில் இருந்து நாலைந்து பேர் வந்து விட்டார்கள்.

''அல்லா மேலே பாரத்தைப் போட்டுட்டு வாம்மா...!

கடைசியாக வந்து இப்பொழுது அழைப்பது ஹலீம் ஹாஜியாரின் மனைவி மீரா உம்மாள். மிகவும் வேண்டிய மாது.

''போகலாமா? போக முடியுமா?''

''யோசனை பண்றதுக்கு இப்ப நேரமில்லே ஷகீலா. எந்த நேரத்திலேயும் உன் வாப்பாவுக்கு எதுவும் ஆவலாம்... கடைசியா ஒரு தரம் பார்த்துக்க வேணுமா? நாளைக்கி நீ அழுவப்புடாது, பாரு. ம்...பெறப்படும்மா!''

''கடைசியாகவா? அப்படியென்றால்...?''

''சக்கராத்து ஹால்லே இருக்காங்க உன் வாப்பா... இந்த நிமிசமோ அடுத்த நிமிசமோன்னு இருக்கு!''

மரணப் போராட்டத்தில் இருக்கும் தகப்பனாரைப் பார்க்க, யார் யாரோ வந்து ஷகீலாவை அழைக்கிறார்கள். சொந்த மகள் கல்லாக நிற்கிறாள்.

''இல்லை...கல்லாக இருக்கவில்லை. உடைந்த தக்காளிப் பழமாகியிருக்கிறது உள்ளம். வெளிக்காட்டிக்கொள்ள முடியாதபடி வேதனை பிழிந்து எடுக்கிறது.

தோளிலும், மடியிலும் போட்டு, செல்வச் செழிப்பில் சீராட்டிப் பாராட்டிய தந்தை முடிவை நோக்கிக் கொண்டிருக்கிறாராம் ..

ஷகீலாவின் சகோதரிகள், குழந்தைகள், மச்சான்மார்களும் ஒருவர் பாக்கியில்லாமல் வந்து விட்டார்கள். இவள்

தான் பாக்கி என்று, மீராஉம்மாள் சொல்கிறாள். ''விட்டுப் படியைத் தாண்டினால் நீ வேறு, நான் வேறு!'' என்று கட்டின புருஷன் சட்டம் போட்டிருக்கிறான். அதை மீறிச்செல்ல முடியுமா?

சிக்கந்தர் அந்த விஷயத்தில் நெருப்பாக இருக்கிறான் என்பது ஷகீலாவுக்குத் தெரியாதது அல்ல.

பத்துநாட்களுக்கு முன்னால்— ''வாப்பா ரொம்ப முடியாம கெடக்குறாங்களாம்...''

ஷகீலா முணுமுணுத்தாள்.

''நீ அங்கே போகணும்கிறியா?'' என்றான் சிக்கந்தர்.

''ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமா பேசறாங்க அதுக்கு எடங்குடுக்காமெ ஒரு தடவை மட்டும்...''

''முடியாது......முடியாது!''

ஆவேசமான மறுப்பு. மனைவியின் மீது அன்பைப்பொழிகிறவன், மாமனார் விஷயத்தில் மட்டும் அக்னிப் பிழம்பாகி விடுகிறான்.

''ஷகீலா...எனக்கு மானம் மரியாதை முக்கியம். அது மாதிரியே நீயும் எனக்கு முக்கியம். நான் உனக்கு முக்கியம்னு நீ நெனச்சா, அங்கே போறதைப்பத்தி நெனக்கக் கூடாது. தகப்பனார் தான் முக்கியம்னு நெனச்சா, நீ தாராளமா அங்கேயே போயிடலாம், நெரந்தரமா...!''

வேறென்ன சொல்ல வேண்டும்? இதற்கு மேலேயும் சொன்னான்.

தன் பேச்சை மீறி, தகப்பனார், வீட்டுக்கு ஷகீலா போனால், அந்த நிமிஷமே அவர்களிடையே ''தலாக்'' ஏற்பட்டு விட்டதாக ஆகிவிடும் என்றானே! ஆறு வருட மண வாழ்க்கை ரத்தாகி விடும் என்பது சாதாரண எச்சரிக்கையா?

ஷகீலா பிறந்த வீட்டை மிதித்து, இரண்டு வருடம் ஆகப்போகிறது.

மாமனாரின் முகத்தில் விழிக்கப் போவதில்லை என்று பிரமாணம் எடுத்துக் கொண்டவன் போல், விலகி நிற்கிறான் சிக்கந்தர். ஷகீலா அவன் நிழலாகவே இருக்கிறாள்.



''படிச்ச பையன்னு ஷகீலாவைக் கட்டிவச்சேன். பையன் தேறமாட்டான் போல இருக்கு, மத்த மருமகப்பிள்ளைங்க மாதிரி முன்னுக்கு வரமாட்டான் போல இருக்கு!'

சிக்கந்தர் காதில் விழுகிற மாதிரி, பலமுறை மாமனார் பேசியிருக்கிறார்.

''மத்த பொண்ணுங்க கண்ணுக்கு அழகா சீர் சிறப்பா குடும்பம் நடத்திக் கிட்டிருக்காங்க...ஷகீலாவை இந்தப் பையனுக்குப்போய் கட்டி வச்சேனே...!'' என்று அவர் முணுமுணுக்கவில்லையா?

சிக்கந்தர் பட்டதாரி. சுமாரான வசதியுள்ள குடும்பம் தான். கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. பொருத்தமான வேலையை எதிர்பார்த்திருந்த போதுதான் ஷகீலாவை அவனுக்குக் கட்டி வைத்தார் காதிர் முகியிதீன். அவருடைய மற்ற மாப்பிள்ளைகளைப்போல் சிக்கந்தர் பகட்டாகவும் பசையாகவும் இல்லை என்ற குறை அவருக்கு.

மாமனாரின் மனக்குறை பலமுனைகளில் சிக்கந்தரை தாக்கிக் கொண்டிருந்தது. ஷகீலாவை ஒரு நாள் நிமிர்ந்து பார்த்து விட்டு வியந்து நின்றான் சிக்கந்தர். ''என்ன ஷகீலா இது? நகை நட்டெல்லாம் என்ன ஆச்சு?''

பதில் சொல்லமுடியாமல் மிடறு விழுங்கினாள்.

''ஓ! நான் நெனைக்கிற மாதிரிதான் நடந்திருக்கணும்!''

''என்ன சொல்றீங்க?''—ஷகீலா தழுதழுத்தாள்.

''உன்னோடெ நகைகளை ஒவ்வொண்ணா வித்து சாப்புட்டுடு வேன்னு நெனைச்சி பத்திரமா கழட்டி வச்சிக்கிட்டார் உன் வாப்பா இல்லையா?''

ஷகீலாவின் முகம் விழுந்து விட்டது.

''பொட்டில் அடித்த மாதிரி இத்தனை கச்சிதமாக நடந்ததை உடைத்துச் சொல்லி விட்டானே! எப்படி முடிந்தது இவனால்?''

கண்ணை கசக்கிக் கொண்டாள்.

''பரவாயில்லை ஷகீலா! இது நான் எதிர்பார்த்ததுதான். அதனாலேதான் சொல்ல முடிஞ்சது நடந்ததை..''

ஷகீலா சங்கடப்பட்டாள். ''இவ்வளவு நடந்தப்புறம் மாமனுர், மருமகன்கிற பந்தத்துக்கு இடம் இல்லே. அதனுலே புருஷனு, தகப்பனுங்கிறது இப்ப உனக்குப் பிரச்னே. எங்கே இருக்கிறது பாதுகாப்புன்னு நீ நெனேக்கறியோ, அங்கே நீ இருக்கலாம், ஷகீலா. நான் சுயநலக்காரன் இல்லே... ஆனு சுயமரியாதை உள்ளவன். உன்னுடைய சுகத்தையும் திருப்தி யையும்தான் நான் பெரிசா நெனேக்கிறேன்!'' விவாதங்க ளுக்கு அவன் இடம் வைக்கவில்லே.

அவள் தாண்ட முடியாதபடி ஒரு கோட்டைக் கிழித்து விட்டான்.

சிக்கந்தர் ஊரிலில்லாத நேரத்தில் சோதனே ஏற்பட் டிருக்கிறது. அவன் வெளியூருக்குப் புறப்பட்டுப் போய் நான்கு நாட்கள் ஆகிவிட்டன. வெளிநாட்டுக்குப் போக வேலே நடந்து கொண்டிருக்கிறது. ஷகீலா அதைவிரும்ப வில்லே.

''ஷகீலா! என் பேரிலே எனக்கு நம்பிக்கை இருக்கு. உன்வாப்பாகிட்டே நான் பணம் காசை எதிர்பார்க்கலே. உன் நகைகளே கழட்டி வாங்கிக்கிட்டாரே அவர், அதைவிட ஒரு பெரிய அவமதிப்பு எனக்கு இருக்க முடியாது... அந்த அளவுக்கு உனக்கு நகை பண்ணிப் போடற வரைக்கும் எனக்கு நிம்மதி கெடையாது...'' என்ருன்.

அழுதாள்.

ஆதரவோடு கண்ணீரை துடைத்துவிடப் போனுன். கண்ணீரை இப்பொழுது கட்டுப்படுத்த முடியவில்லே. ஒரே யொரு முறை, கடைசியாக, தந்தையைப் பார்த்து விட்டு கண்ணீரைக் கொட்டிவிட்டு வரவேண்டும் என்று துடிக்கிருள்.

முடிகிற காரியமா?

''ஷகீலா ! யோசனே பண்ணிக்கிட்டிருக்கப் புடாது. இந்நேரம் அங்கே உன் வாப்பாவுக்கு என்னஆச்சோ தெரி யலே, இப்ப சிக்கந்தர் வீட்லே இருந்தா, ஆபத்துக்குப் பாவம் இல்லேன்னு உன்னே அழைச்சிக்கிட்டுப் போயிருக்கும்...நீ கெளம்பும்மா...''



மீரா அம்மாள் தூண்டுகிருள். தோளேப்பற்றி இழுக்கி ருள். எப்படியோ துணிவு வந்து விட்டது.

ஷகீலா கிளம்பிவிட்டாள். வீட்டில் மற்றவர்களுக்கு இழப்புதான், ஆமாம், காதிர் முகியிதீன் போய் விட்டார் என்ற துயரம்.

ஷகீலாவுக்கு இரட்டை இழப்பு துயரத்திற்கு எல்லே இருக்கவில்லே.

தகப்பனுரை அள்ளிக் கொடுத்தாகி விட்டது.

கணவனின் ஆதரவும் அல்லவா போய்விட்டது!

செய்தி ஊர் முழுவதும் பரவி விட்டது.

சிக்கந்தரின் வார்த்தையை மீறி வாப்பாவைப் பார்க்க வந்ததால் அவனுடைய ''தலாக்'' எச்சரிக்கை ஷகீலா விஷ யத்தில் ஊர்ஜிதமாகி விட்டது என்று மூலேக்கு மூலே பேச்சு!

வீடு விடியவில்லே. ஒரு துன்பம் போதாது என்று இன் ெனுரு துயரம், ஷகீலா கேள்விக் குறியாக இருந்தாள். அவள் நிலேமை என்ன? அனுதையா? வாழா வெட்டியா?

கணவனிடம் திரும்பிச்செல்ல மார்க்கம் இல்லே என்கிருர் கள். ஏதோ ஒரு வேகத்தில் சிக்கந்தர் விவாகரத்து எச்ச ரிக்கை கொடுத்திருந்தாலும் அது செல்லுபடியாகும் என்று பெரியவர்கள் கூறுவதாகப் பேசிக் கொள்கிருர்கள். அத்தனே சுலபத்தில் அறுத்து எறியக்கூடிய உறவா அது? ஷகீலா துவண்டு விழுந்திருக்கிருள். சோறு தண்ணீர் கிடையாது. தூக்கம் இல்லே. ஓயாத கண்ணீர்.

என்ன நடந்திருக்கிறது. சிக்கந்தருக்கு கண்ணேக் கட்டி விட்ட மாதிரி இருந்தது.

ஷகீலா இல்லாத வீடு வீடாகத் தெரியவில்லே அவனுக்கு. வேலேகளே முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பியவன் அப்படி ஓர் அதிர்ச்சியை எதிர்ப்பார்க்கவில்லே. மாமனுர் மண்ணறைக்குப் போய்விட்டார் என்ற தகவல் பஸ்ஸை விட்டு இறங்கியதுமே அவனுக்கு எட்டி விட்டது.

ஷகீலா தாய் வீட்டுக்குப் போய் வாப்பாவின் கடைசி நேரத்தில், பக்கத்திலேயே இருந்தாள் என்பதும் செவியில் விழுந்தது.

அவள் தந்தையை இழக்கப் போய், அவளைச் சிக்கந்தர் இழந்து விட்டானு?

மனம் தறிகெட்டு அலைந்தது வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தான்.

அறை, கட்டில், பெட்டிகள், பீரோ, கொடியில் ஷகீலா வின் புடவைத் துணிமணிகள் எல்லாம் அப்படியப்படியே இருக்கின்றன.

இனி இவற்றின் கதி என்ன? திருப்பியனுப்பி விட வேண் டுமா? ஷகீலாவின் நிழல் கூட இனி இந்த வீட்டில் படமுடி யாதா?

ஆதரவாக யாராவது தன்னைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு ஆறுதல் சொல்ல வேண்டும் போல் தவிப்பு, அவ னுக்கு

ஷகீலாவே போய்விட்ட பிறகு யார் வரப்போகிருர்கள்?

''சிக்கந்தர்!'' வாசலில் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

ஹலீம் ஹாஜியார்! மீராஉம்மாளின் கணவர். அவனு டைய மாமனுரின் நண்பர். வந்தவரை உட்காரச் சொன் ஞன்.

''நீ வந்தது கேள்விப்பட்டதும் கௌம்பி வர்றேன் ..!'' நிரம்பப் பேசுவார் போல் தெரிந்தது.

''அல்லா நாடினது நடக்கும் காதிர் முகியிதீன் போய்ச் சேர்ந்திட்டார். கடைசி வரைக்கும் அவருக்கு ஒரே கவலைதான்...!''

''என்ன பெரிய கவலை வேண்டியிருக்கிறது, அந்தக் கல் நெஞ்சக் காரருக்கு!'' அவனுக்கு குமுறலாகவே இருந்தது.

''சிக்கந்தர்! காதிர் முகியிதீன் உனக்கு மாமனுக இருக்க லாம். எனக்கு பால்யத்திலேருந்தே சிநேகிதர். என் யோசனை இல்லாமெ அவர் எதுவும் செய்ததில்லே!''

நிமிர்ந்து பார்த்தான்.

''மாப்பிள்ளையை பார்க்கணும் அழைச்சிகிட்டு வாங்கன்னு புலம்பிக்கிட்டேயிருந்தார். வந்து பாத்தப்ப நீ ஊர்ல இல்



லேன்னு ஷகீலா சொல்லிச்சு. ஷகீலாவை அழைச்சிட்டுப் போக நெனைச்சி கூப்புட்டேன். வரமாட்டேன்னு சொல்லிட் டது. அப்புறம் கடைசிநேரத்திலே என் வீட்டுக்காரங்களை அனுப்பி அழைச்சிட்டு வரச் சொன்னேன். மீரா உம்மாதான் பொறுப்பா பேசி கூட்டியாந்தது. இப்பவும் அது பக்கத்திலே அவங்கதான் இருந்து கவனிச்சுக்கிருங்க!'' சிக்கந்தர் மன முடைந்தான் தான்.

''எவ்வளவோ சொல்லனும் போல இருக்கு. ஆனு எப் படிச் சொல்றதுன்னு எனக்கே சங்கடமா இருக்கு''

''சிக்கந்தர்! முதல்லே ஒரு உண்மையை நீ புரிஞ்சுக் கணும். நீ நெனைச்சிருக்கிற மாதிரி உன் மாமனுர் திமிர் பிடிச்சவரோ, உன் மேலே பிரியம் இல்லாதவரோ இல்லே. மத்த மருமகப் பிள்ளைகளைப் பத்தி அவர் கவலைப்பட்டதே இல்லை. அவங்க உன்னை இளப்பமா பார்க்கிறதாலே, உன்னை அவங்க அளவுக்கு உயர்த்தி வைக்கணும்னு நெனைச்சிதான் ஒரு உபாயத்தைச் செய்து பார்த்தார்...''

சிக்கந்தர் நம்பத் தயாராக இல்லை.

''நான் இப்படி சொன்னு ஷகீலா கூட நம்பாது. ஆனு நடப்பு அதுதான். அப்பப்ப உனக்கு ஆத்திரம் வர்றமாதிரி அவர் பேசினது, நடந்துக் கிட்டதெல்லாம், உனக்கு ஒரு வேகத்தை உண்டாக்கி விடுறதுக்காகத்தான்; அந்த வேகத் தில் மத்த மாப்பிள்ளைகளை விட நீ மேலே வருவேன்னு நம்பினுர்...!

"சே, இது உபாயமா? உத்தியா?'' எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"பத்து நாள் முன்னுடி என்னைக் கூப்பிட்டனுப்பினுர். உடல் நிலையைப் பாத்தா சீக்கிரமே ''மவ்த்து'' வந்திடும் போல இருக்குன்னு சொன்னுர். நான் சமாதானம் சொன் னேன். 'கண்ணை மூடுறதுக்கு முன்னுலே, ஒரு ஏற்பாட்டைச் செய்துடணும்னு சொல்லி, அதன்படியே செய்து முடிச் சிட்டார். ஆமா; அவருடைய வீடு, தோட்டம் நிலபுலன்லே பெரும் பகுதி எல்லாத்தையும், ஷகீலா பேர்ல எழுதி வச் சிட்டார், ரொம்ப ரகசியமா..."

சிக்கந்தர் நெற்றியைச் சுருக்கிக் கொண்டான்.

''அதிலேருந்து சதா, உன்னைப் பத்தி தான் பேசிக்கிட்டிருந்தார். மாப்பிள்ளை மனசைப் புண்படுத்தியிருக்கேன்னு பல முறை புலம்பினுர். ஷகீலாவையும், உன்னையும் இங்கே ஒரு வேளை கை நனைக்கணும்னு நெனைச்சிருந்தார். எல்லாம் தலை கீழாப் போச்சு, சிக்கந்தர்!''

ஹலீம் ஹாஜியார் கண்கலங்கிப் போனுர்.

''இப்ப ஊர்க்காரங்க உங்க விவகாரத்தைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருக்காங்க... ''தலாக் தலாக்''னு அவங்க பேசறது, என்னைச் சம்மட்டியாலே அடிக்கிற மாதிரி இருக்கு...'' என்றுர். அந்தஅடி, தன் மீது அல்லவா விழுகிறது என்று ஓலமிடுகிறது, சிக்கந்தரின் உள்ளம். 'உடைந்து வழிகிறது கண்ணீர். அநியாயமாக ஷகீலாவை இழந்து விட்டேனே!'' என்று அடித்துக் கொள்கிறது மனம்.

''சிக்கந்தர், இப்ப நீ கண்ணீர் வடிக்கிற மாதிரிதான், நானும் மீரா உம்மாவும் அழுதோம். நீ விதிச்சிருந்த நிபந்தனை, இவ்வளவு பெரிய சோதனையா முடியும்னு நாங்க எதிர்பாக்கலே, உள்ளூர் ஆலிம்கள் கிட்டே யோசனை கேட்டப்ப, இந்த தலாக் செல்லுபடியாகும்னு சொல்லிட்டாங்க. சேதி ஊர்பூரா பரவி விட்டது...''

சிக்கந்தர் நிலை குலைந்திருந்தான்.

''எனக்கும் மீரா உம்மாவுக்கும் நிம்மதி இல்லே...நித்திரை இல்லை. ஒரு விதத்திலே இந்த நெலைமை ஏற்படுறதுக்கு நாங்கதான் காரணம் இல்லையா? மீரா உம்மா ஷகீலாவைக் கூட்டிட்டு வந்ததினுலேதான் இவ்வளவும்! ரெண்டு பேரும் யோசனை பண்ணினுேம்.. யார் கிட்டேயும் சொல்லிக்காம வெளியூர் மதராசுவுக்குப் போய், சரியான தீர்ப்பு வாங்கிட்டு வரணும்னு முடிவு செஞ்சேன்... போன இடத்திலே...''

''ஏன் நிறுத்திட்டீங்க? சொல்லுங்க...''

''இதோ இருக்கு அவங்க குடுத்த பத்வா! நீயே படிச்சிப்பார் அந்தத் தீர்ப்பை!''



காகிதத்தை வாங்கிக் கொண்டான், நடுங்கும் கரத்தில் பிரித்தான், ஊர் ஜமாஅத்துக்கு எழுதப்பட்டிருந்த கடிதம் அது.

''பிரஸ்தாப தலாக் விவகாரத்தைப் பரிசீலித்தோம். இந்தத் தலாக் — விவாகரத்து — செல்லுபடியாகும் என்று சிலர் சொன்னதாகத் தெரிய வந்தது. இது சிக்கலான விஷயமாகப் பட்டாலும், தெளிவான ஒரு முடிவுக்கு வர இடம் இருக்கிறது. ஒரு பெண்ணின் தந்தை இறந்து விட்டபிறகு, அந்த வீடு அவருடைய வீடல்ல. அது மட்டுமல்ல, ஷகீலாவுக்கு, தான் இருந்த வீட்டையும் அவள் தகப்பனுர் எழுதி வைத்து இருக்கிறுர், எனவே அந்த வீடு பெண்ணுக்குரிய வீடாகி விடுகிறது. ஆகவே, பிரஸ்தாப பெண் தன் வீட்டுக்குத்தான் சென்றிருக்கிறுளே தவிர, தகப்பனுரின் வீட்டுக்கு அல்ல. ஆகவே, இந்த தலாக் செல்லாது தலாக் நிகழ்ந்து விட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் கணவன் மனைவியாக வாழலாம்!''

நெகிழ்ந்து போய் ஒரு குழந்தையைப்போல், தேம்பித் தேம்பி அழுதான். ஆதரவோடு அணைத்துக் கொண்ட ஹலீம் ஹாஜியாரைப் பின் தொடர்ந்து மனைவியை பார்க்கப் புறப்பட்டான் சிக்கந்தர்.

— **தினமலர் : வாரமலர்**

# ஒட்டு 2

விருந்தாளியாக வந்திருந்த புகாரி கண்கள் விரிய விரிய அறையைப் பார்த்தான்.

அமீர்பாட்சா ஆயிரக்கணக்கில் அள்ளி இறைத்திருப்பான் போலிருக்கிறது. அவன் அறையில் அத்தனை அலங்காரம்.

''இதுதான் என்னுடை அந்தப்புரம்! எப்படி இருக்கு?''

''ஒத்தை வாக்கியத்திலே நீயே சொல்லிட்டியே. நான் என்ன சொல்லப் போறேன், அமீர்?''

''அந்தப்புரம் இருக்கு. ஆனா மகாராணி இல்லே! அம்மா வீட்டுக்குப் போயிருக்கிறாள் என் பெஞ்சாதி. அதனாலே என்ன! உனக்கு விருந்து போட்டுத் திக்குமுக்காட வச்சித்தான் ஊருக்கு அனுப்பப் போறேன்!''

இரண்டு மாத விடுமுறையில் 'நிக்காஹ்'செய்து கொண்டு திரும்புவதற்காகப் புகாரி ஊருக்கு வந்திருந்தான். வெளிநாட்டில் அமீரும் அவனும் ஒன்றாகப் பணி புரிந்தவர்கள். பக்கத்து ஊர்க்காரன் என்றாலும் அமீரின் வீட்டைத் தேடி இப்பொழுதுதான் புகாரி வந்திருக்கிறான்.

''அமீர், அந்த ஜன்னலைத் திறந்து வையேன்!''

''புழுக்கமா இருக்கா? ஏண்டா ஏ.ஸி. பொருத்தலைன்னு கேக்கறியாக்கும்? சீக்கிரமே போட்டுட வேண்டியதுதான்!''

''இல்லே, அதுக்காக நான் சொல்லலே அமீர்!''

''சரி, ஜன்னலைத் தெறந்து வக்கிறேன். தெறக்க வேண்டிய நேரந்தான்!'' அமீர் ஜன்னல் கதவுகளைத் திறந்தபடி சொன்னான். ''நல்ல காத்து வரும்... காத்து மட்டுமில்லே, கண்ணுக்கு விருந்தும் கெடைக்கும்!''

இரண்டு நிமிஷம் அமீர் ஜன்னலருகிலேயே நின்றான். எதையோ தேடும் ஆவல் கண்ணில் மிதந்தது. சில வினாடிகளில் அவன் முகத்தில் செழிப்பான புன்னகை.

பிறகு நண்பனிடம் வந்தான்.

''லீவு கரைஞ்சிட்டேயிருக்கே. கலியாணம் எப்ப வச்சிருக்கே? பெண் பாத்தாச்சா? வரும்படி எவ்வளவு எதிர் பார்க்கிறே?''

புகாரி சன்னமாகச் சிரித்தான், ''உனக்குத் தெரியாமலா?'' என்றான்.

''யார் கண்டாங்க? யாருக்கும் தெரியாமல் ரகசியமாக நிக்காஹ் முடிச்சிட்டுச் சொல்லாம கொள்ளாமே பயணம் போனாலும் போயிடுவே! சரி, இப்ப உனக்கு விருந்து தரப் போறேன். ஆரம்பிக்கலாமா?''

புகாரி கொஞ்சம் அதிர்ந்தான். மதுபானத்தைக் குறிப்பிடுகிறான் நண்பன்.

''அமீர், வீட்லேயும் கூட இந்தப் பழக்கமா?''

''இதுதான் பாதுகாப்பான இடம்!''

''இங்கே யாராச்சும் பாத்தாங்கன்னா...?''

''அந்தப்புரமாச்சே...... அத்து மீறி யாரும் வரமாட்டாங்க!'' அமீர் பெட்டியைத் திறந்தான். வெளிநாட்டு மதுபானம்! பாட்டிலை உயர்த்திக் காட்டினான். பெருமிதத்தோடு,

''சே, நீ சுத்த மோசம்!''

''ஆமாமாம்! இங்கே வந்து எதைச் செய்யாமே இருக்கோம் — இதை மட்டும் ஒதுக்கி வக்கிறதுக்கு?''

''இருக்கோம்னு சொல்லாதே! இருக்கேன்னு சொல்லு''

''உபதேசம் ஆரம்பிச்சிட்டியா? மதுபானம் குடிக்கிறது ஹராம், விலக்கப்பட்டது, பாவம் அப்படி இப்படின்னு அளப்பியே! நீ சரியான கோழை...''

புகாரி புன்னகை செய்தான், அவன் சுபாவம் அப்படி. பாவ புண்ணியம் பார்க்கிறவன். வளர்ந்த சூழ்நிலை அந்த மாதிரி, அம்மா அவனை ஆளாக்கிவிட்ட விதம் அப்படி.

அமீர் பானத்தை ருசித்தபடியே, ''வெளிநாட்டிலிருந்து கொண்டார்ந்தது பூரா குளோஸ். இது முந்நூறு நானூறு குடுத்து இங்கே வாங்கினது,'' என்றான்.

குடித்தபடி ஜன்னல் பக்கம் போனான். வெளியே பார்த்தான். முகத்தில் மகிழ்ச்சி மின்னல். ''மறைஞ்சிருந்து பாக்கறதே ஒரு தனி சுகம்பா!'' என்றான். நண்பனை அருகில் வரும்படி சாடை காட்டினான்.

புகாரி திகைப்புடன் பார்த்தான். எதிரே தாழ்வான பழைய வீடு தெரிந்தது. முற்றத்தில் ஒரு பெண் வேலையாக இருந்தாள். அங்கே எது நடந்தாலும் இங்கிருந்தபடி பார்க்கலாம்.

''பார்! அந்த ஒட்டு!''

''ஒட்டா? அப்படீன்னா?''

''பருவச் சிட்டுன்னு சொன்னாத்தான் உனக்குப் புரியும். நான் அவளுக்கு வச்சிருக்கிற பேர் ஒட்டு.''

புகாரிக்கு அருவருப்பாக இருந்தது.

அடுத்த வீட்டுப் பெண்ணைத் திருட்டுத்தனமாகப் பார்ப்பதில் இத்தனை பெருமையா இவனுக்கு?

''ஒட்டுன்னு ஏன் பேர் வச்சேன் தெரியுமா? இப்பப்பார்...

அவள் சேலையிலே எத்தனை ஒட்டு! ஜாக்கெட்லே கூட ஒட்டு...!''

புகாரி முகத்தை திருப்பிக்கொண்டு நாற்காலிக்கு திரும்பினான்.

அமீரும் திரும்பி வந்தான்.

''அமீர், இந்தப் பெண் யார்?''

''ஒரே ஒரு தடவை பாக்கறதுக்குள்ளேயே இவ்வளவு அக்கறையா? நீ பெரிய ஆளுப்பா!'' சிரித்தான் அவன். ''அந்தப் பெண்ணைப் பத்திக் கேட்டே இல்லே... இல்லாதது பணம் காசு. அவளிடம் பரிபூரணமா இருக்கிறது என்னாங்கிறதைத்தான் பாத்தியே! ஒட்டும் கிழிசலுமாய்க் கட்டிக்கிட்டாலும்; உடம்பு எப்படி இருக்கு பாத்தியா? தினம் பத்துத் தடவையாச்சும் இப்படிப் பார்த்திட்டேயிருப்பேன். என்னத்ரில்? அடாடா!''



புகாரி மௌனமாக இருந்தான்.

கடைக்கண்ணால் நண்பனைக் கவனித்தான் அமீர். ''கடைத்தெரு டீக்கடையிலே அடுப்பு வேலை பாக்கற நயினா முகம்மதுவுடைய மகள் ரஜியா சுல்தானா... அழகிலே சுல்தானா தான்! பக்கத்திலே உக்காந்து நாள் பூராபாத்துக்கிட்டிருக்கலாம் போல அழகு!''

புகாரி பேசவில்லை.

''நயினா முகம்மதுக்கு தினச் சம்பளம் நாலு ரூபா. நண்டும் சிண்டுமா புள்ளைகுட்டிங்க அதிகம். மூத்தவளாச்சே? அதனாலே ரஜியாதான் குடும்பத்தைக் கட்டியிழுத்துக் கிட்டிருக்கா. என் பணத்தைக் காட்டி இவளை சுலபமாய் வளைச்சுடுவேன். ஒட்டுதானே! அலட்சியமாய்ச் சிரித்தான் அமீர்.

''அமீர், இன்னொரு ஒட்டுக் கதை உனக்குத் தெரியுமா?''

''அது என்ன புதுக் கதை?''

''இல்லே, பழசுதான். பாத்திமா நாயகியோட கதை எந்தப் பாத்திமான்னு கேட்டுடாதே. நான் சொல்றது நபிகள் நாயகத்தோட மகள் பாத்திமா நாயகியைப்பத்தி. ஒரு நாள் அவங்க பன்னிரண்டு ஒட்டுப் போட்ட துப்பட்டியைப் போர்த்துக்கிட்டு வெளியே போய்க்கிட்டிருந்தாங்க. அதைப் பாத்து அதிர்ச்சியடைஞ்சிட்டார் நாயகத்துடைய நண்பர் உமர். நபிகள் நாயகத்துக்கிட்டே போய், ஒரு நபியுடைய புதல்வி ஒட்டுப்போட்ட துப்பட்டியைப் போட்டுட்டுப் போகலாமான்னு கேட்டு அழஆரம்பிச் சுட்டாங்க. நாயகம்...''

''ஏன் நிறுத்திட்டே? சொல்லு புகாரி.''

''நண்பர் கேட்ட கேள்விக்கு நாயகம், 'என்னுடைய மகள் அப்படியே இருக்கட்டும். ஏன்னா சொர்க்கத்திலே முதலிடம் கெடைக்கிறது இது மாதிரி எளிமையா உள்ளவங்களுக்குத்தான்'னு சொன்னாங்களாம்.''

அமீர் விழித்தான்.

''என்ன யோசிக்கிறே அமீர்? உன் கையிலே இருக்கிற புட்டி உன் இருதயத்தைப் பாறாங்கல் ஆக்கியிருக்குது! இல்லையா?''

''உனக்கு என்ன ஆச்சு?'' என்று அமீர் கேட்டான்.

''ஒண்ணும் ஆகலே... உன் கண்ணை மறைச்ச ஜன்னல் என் மனசைத் திறந்திருக்கு! அவ்வளவுதான். உடனடியா ஒரு பொண்ணை நான் காப்பாத்த வேண்டியிருக்கு.''

''எந்தப் பெண்ணை? யாரிடமிருந்து காப்பாத்தப் போகிறே?''

''நாலு ரூபாய் வருமானத்திலே குடும்பத்தை நடத்தத் தெரிஞ்ச பெண்ணை! ஒட்டுச் சேலையைப் பட்டா நெனைச்சி பகட்டில்லாமே வாழத் தெரிஞ்ச பெண்ணை! அவளை உன் கிட்டேயிருந்து—உன்னைப் போன்ற பிசாசுகளிடமிருந்து காப்பாத்தியாகணும்.''

''புகாரி உனக்குப் பைத்தியமா என்ன?''

''இல்லே... ரொம்பத் தெளிஞ்ச மனசோடுதான் பேசறேன், அமீர். நாளைக்கே என் அம்மாவை வரச் சொல்லி ரஜியாவைப் பெண் கேட்கச் சொல்லப் போறேன். அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும். ஏன்னு இந்த ரஜியா மாதிரியே அவங்களும் வயித்தைக் கட்டி வாயைக் கட்டி மானத்தோடு வாழ்ந்து என்னை ஆளாக்கிவிட்டவங்க.''

அமீரின் கையிலிருந்த மதுப்புட்டி கீழே நழுவி விழுந்தது. நண்பனையே வெறித்துப் பார்த்தான்...

குமுதம் : 1981



# குர்பானி 3

சாரா மாலைத் தொழுகையை முடித்துவிட்டு கையேந்தி 'துவா' இறைஞ்சினாள்.

இப்படிக் கையேந்தும்போது இரும்பான இதயம்கூட பஞ்சுபோல் ஆகிவிடுகிறது. சாராவின் நெஞ்சம் என்றைக்குமே பஞ்சுதான்! இதை உணர்ந்துதான் அவளை மடக்கி விடுவது என்ற தீர்மானத்தோடு போனவாரம் கதீஜா வந்தாளோ?

சாரா எதிர்பார்க்கவில்லை.

''சாராம்மா... மதம் புடிச்ச அந்தக் காட்டு யானையோட அளிச்சாட்டியம் அளவுக்கு மீறிப் போயிடுச்சும்மா... ஊரே நடுங்கிக்கிட்டிருக்கு...!''

—கதீஜா மாமி இப்படித்தான் ஆரம்பித்தாள்.

''முந்தாநாள் தர்காவுலே உக்காந்து இந்த யானையும் சிநேகிதக்காரங்களும் சீட்டு வெளையாடிக்கிட்டிருந்தானுங்களாம். மஃரிபு நேரம். பாத்தியா ஓதுறதுக்காக உதுமான் லெப்பை வெளக்கேத்தி ஊதுவத்தி கொளுத்தி வச்சிட்டு, எதம்பதமா இவன்கிட்டே சொல்லிப் பாத்துருக்காரு. தர்க்காவை விட்டு போகச் சொல்றதுக்கு நீ யாரு'ன்னு வெறப்பு சரப்பா கேட்டுப்புட்டு கையை ஓங்கி அடிச்சுப்புட்டானும் பாவி... தர்காவுலே அடக்கமாகி இருக்கிற அவுலியாவினாலே அவனைக் கேக்க முடியுமா? இல்லே அந்த அல்லாவினாலே தான் கேக்க முடியுமா?''

முடியாதுதான்.

''நேத்து இருட்டுற நேரம். இலுப்பைத் தோப்பு படித்துறைக்கு தண்ணி எடுக்கப் போயிருக்கா லாடக்கார லத்தீபு மகள். கொடத்தை இடுப்புலே வச்சிக்கிட்டு குனிஞ்ச தலை நிமிராம போய்க்கிட்டிருந்த அந்தக் கனியாப் பொண்ணை மடக்கியிருக்கான் இவன். கையைப் புடிச்சி இளுக்காத

குறையாம்! அந்தப் பொண்ணு வூட்டுக்கு வந்து தேம்பித் தேம்பி அழுதா... இப்புடியே போய்க்கிட்டிருந்தா இந்த ஊரு என்னு ஆவுறது? இவனை யாராச்சும் கண்டிக்க முடியுமா? இல்லே தண்டிக்க முடியுமா?''

இரண்டும் முடியவில்லை!

''சாராம்மா, அந்த மதம் புடிச்ச யானையைப் பெத்த இந்த வயிறு பத்தி யெரியுதும்மா...'' என்று பதறிப் பரிதவித்து, கண்ணீரைப் பிழிந்தாள் கதீஜா.

காதர்பாட்சாவின் கதை யாருக்குத் தெரியாது? 'காட்டு யானை' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள் ஊர்க்காரர்கள். கண்டிப்பு, கட்டுப்பாடு, கல்வியறிவு இல்லாமல் செல்லமாக வளர்க்கப்பட்டவன், முள்மரம் போல் நிற்கிறான். நல்லவர் யாரும் நெருங்க முடிவதில்லை. அவனை குருவாக்கிக் கொண்டு எந்த நேரமும் சூழ்ந்து கொண்டிருக்க, ஒரு பட்டாளம் இருக்கிறது.

'யானை வருது டோய்...' என்றவாறு அவனைப் பார்த்து ஓட்டம் எடுப்பவர்களும், 'வஸ்தாது வர்றாரு' என்றவாறு ஒதுங்கிக் கொள்பவர்களும், இந்த நிமிஷம்வரை எல்லா தெருவிலும் இருக்கிறார்கள்.

எல்லாமே சாராவுக்குத் தெரியும். முறை மச்சான் அல்லவா? கதீஜா மாமி அவள் தந்தையுடன் பிறந்தவள். சொந்த மச்சானைப் பற்றி துயரம் முட்டமுட்ட கதீஜா வருணிப்பது சாராவையும் வாட்டி வதைக்கத்தான் செய்கிறது. என்றாலும், அவள் செய்வதற்கு என்ன இருக்கிறது?

கதீஜா மாமியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மகனைப்பற்றிய கவலையில் உலர்ந்த திராட்சை போல் வாடி வதங்கியிருக்கிறாள். அவளைத் தேற்ற வேண்டியது தன் கடமை என்பதை உணர்கிறாள் சாரா. அந்த மனோதத்துவம் அவளுக்குத் தெரியும். ஆசிரியை அல்லவா? அழகின் உருவம், அடக்கத்தின் வடிவம் என்று பெயரெடுத்திருக்கிறாள் சாரா. பட்டதாரி ஆசிரியையான அவள் ஊருக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறாள். அந்தப் புகழையும் பெருமையையும் நினைத்து கதீஜா மாமி பூரித்துக் கொண்டிருப்பவள்தான்.



''சாராம்மா... ஒரு வாத்தியாரம்மாவா உன்னை நெனைச்சி நல்ல யோசனை கேக்கத்தான் வந்திருக்கிறேன் இப்ப...! வழி சொல்லுவியாம்மா?'' -- படபடப்புடன் கதீஜா கேட்டாள்.

''என்ன வேணுமோ கேளுங்க மாமி.. ஒங்களுக்கு இல்லாத உரிமையா?'' என்றாள் சாரா.

''ஆமாம்மா... எனக்கு உரிமை இருக்கு... ஏன்னு கேப்பியா, கேக்க மாட்டே... என் அண்ணனோட பொண்ணாச்சே...!''

'கதீஜா என்ன கேட்க நினைக்கிறாள்?' சாராவினால் மனக் கணக்குப் போட முடியவில்லை.

''சாராம்மா, கையை ஓங்காமெ, பெரம்பை எடுக்காமெ புள்ளைங்களுக்குப் பாடம் சொல்லிக் குடுக்கறே, இல்லியா?'' என்றவாறு சாராவை ஏறிட்டுப் பார்த்தாள் கதீஜா.

''மாமி, நீங்க என்ன சொல்றீங்க?''

''புரியலே..? மதம் புடிச்ச யானையை அடக்கக்கூடிய அங்குசம் உன் கையிலே இருக்கு சாரா...''

சாரா திடுக்கிட்டாள்.

''சூதாடி, குடிகாரன், வஸ்தாது, வம்பன், இபுலீசு... இப்படி நூறு பட்டம் வாங்கியிருக்கிற காதர்பாட்சாவை-உன்னோட மச்சானை, கட்டிக்கிட்டு அவனை நீதான் மனிசனாக்கணும்!''

சாரா நிலை சாய்ந்து போனாள்.

'இப்படி ஒரு கற்பனையா? பேராசையா?'

கதீஜா கஷ்டப்பட்டு சாராவை நிமிர்ந்து பார்த்தாள். சங்கடமாக இருந்தாலும் சொல்ல வந்ததைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

''சாராம்மா, இது என்னோட வேண்டுதல் மாத்திரம் இல்லே... இப்ப உன்கிட்டே கெஞ்சிக் கேக்கறதுக்கு அவனோட தூண்டுதலும் காரணம்...''

''தூண்டுதலா?''

''ஆமாம்மா... 'உன்னையத் திருத்தறதுக்கு ஒரு நல்ல பொண்ணு பாத்து கல்யாணம் கட்டி வக்கிறேன்'னு காதர் பாட்சா கிட்டே சொன்னேன். அப்ப அவன் சொன்னான்: 'சாராவை எனக்குக் கட்டி வைப்பியா .. ஒன்னாலே முடியுமா? முடியுமா, சொல்லு!' அப்படீன்னான் .. அப்பத்தான் எனக்கு மனசிலே ஒண்ணு பட்டுச்சி... நீ அவனை ஏத்துக்கிட்டா அவனைத் திருத்திட முடியும்!''

அதிர்ச்சியிலிருந்து மீளாமல் உட்கார்ந்திருந்தாள் சாரா.

''சாரா... இது ஒரு 'குர்பானி'யாட்டம். நம்மகிட்டே இருக்குற எந்தப் பொருளையும், அவசியமானா நம்பளையே கூட அல்லாவுக்கு அர்ப்பணிக்கிறதுதானே 'குர்பானி!' அல்லாவுடைய பாதையிலே, ஒரு கெட்டவனைத் திருத்தி நல்லவனா மாத்தறதுக்காக தியாகம் செய்யிறது 'குர்பானி' மாதிரிதான்...!''

— கதீஜா பேசிக் கொண்டிருந்தாள். பேச முடியாமல் வாயடைத்துப் போய் விட்டாள் சாரா.

''சாரா, நல்லா யோசிச்சுப் பாரும்மா! உன்னோட நெலமை எனக்குத் தெரியும். நல்லவங்க, பெரியவங்க தியாகம் செய்யிறதில்லையா, அதுமாதிரி நம்ம குடும்பத்தைக் காப்பாத்த நீ இப்படி ஒரு தியாகத்தை...''

கதீஜா அழுது விட்டாள்.

வெகுநேரம் வசமிழந்து உட்கார்ந்திருந்தாள் சாரா.

நஞ்சை அமுதாக்கும் சோதனையல்லவா?

சாராவின் நெஞ்சம் அந்த நேரம் அழுதது. அதற்குக் காரணம் இருந்தது. இன்னொருவனைக் கைப்பிடிக்க அவள் வகுத்திருந்த திட்டம்...?

பப்பாளிச் செடிபோல் ஒல்லியாகவும் உயரமாகவும் ஒருமுறைக்கு இரண்டு முறை பார்க்கவும், பேசவும் தூண்டும் அடக்கமான வசீகரிப்புடன், ஊரே மெச்சும்படி உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கிற சாரா, அதே தகுதிகளுடன் ஆண்கள் பள்ளிக்கூடத்தில் பணிபுரியும் சலீமை மணந்து



கொள்ளப் போகிறாள் என்பது பலருக்கும் எட்டிய சங்கதி. அநேகமாக முடிவான விஷயம். ஓர் இமை பிசகாமல் சாராவும் — சலீமும் கண்ணியமாக, கௌரவமாகப் பேசவும், பழகவும் சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கின்றன. நட்பு முறையில் ஏற்பட்ட சந்திப்புகள் திருமணம் நடைபெறும் அளவுக்கு அவர்களை அருகில் கொண்டு வந்து விட்டன.

இருவரும் மண நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது கதீஜாவுக்குத் தெரியாததல்ல. அறிந்திருந்தும், அதைத் தகர்த்து, தரைமட்டமாக்கி விடும் எரிகுண்டை வீசி விட்டுப் போயிருக்கிறாள்.

ஒன்றின் முடிவு மற்றொன்றின் துவக்கமா?

சாரா தொழுகைப் பாயில் அமர்ந்தபடி தஸ்பீஹ்-ஜப மணியை உருட்டிக் கொண்டிருந்தாள்.

சில நாட்களாகத் தொழுகைக்குப் பிறகு நீண்ட நேரம் 'துவா' இறைஞ்சி விட்டு, மணியை உருட்டுவது பழக்கமாகி இருக்கிறது. விடுமுறை ஒரு காரணம். இதயத்தைப் பஞ்சாக்கிக் கொள்ளும் முயற்சி இன்னொரு காரணம்.

பிரளய கதியில் இப்பொழுது ஊரைக் கலக்கிக் கொண்டிருக்கும் செய்தி சாராவுக்கு நேரத்திற்கு நேரம் எட்டியபடி இருக்கிறது.

'சாரா டீச்சர் காட்டு யானையைக் கட்டிக்க சம்மதிச்சுட்டது.'

'இது எட்டாவது அதிசயம்!'

'குரங்கு கையிலே பூமாலையை யாராச்சும் ஒப்படைப்பாங்களா?'

'அல்லாவுக்கே இது அடுக்காது... படிச்ச பொண்ணு அந்தத் தற்குறிப் பயலையா கட்டிக்கணும்?'

வெளியே பிரளயம்! உள்ளே தஸ்பீஹ் மணியை உருட்டிக் கொண்டிருக்கிறாள்—சாரா, சலனமில்லாமல். சஞ்சலப்படுவதற்கு என்ன இருக்கிறது? சலீமை அவள் இரண்டு நாட்களுக்கு முன் சந்தித்தபோது—

''அல்லாவுடைய நாட்டம் வேறு விதமா இருக்குங்க!'' என்று ஆரம்பித்தாள்.

''எந்த விஷயத்திலே...?'' என்றான் அவன்.

''நம்ம சொந்த விஷயம்!''

சலீம் விளக்கம் கேட்டான். அவள் விவரித்துச் சொன்னாள்.

''மாமி சொன்ன ஒரு சொல்லுதான், என்னை மந்திரக் கயிறு மாதிரி கட்டிப் போட்டுட்டதுங்க...'' என்றாள் கலக்கத்துடன். அவனுக்கும் மெல்லிய கண்ணீர்ப்படலம்தான். பேச முடியவில்லை.

''ஆமாங்க... இதை ஒரு 'குர்பானி'யா நெனைச்சி, என்னை நானே தியாகம் பண்ண முடிவு பண்ணிட்டேன். இதுக்கு உங்க சம்மதம் முக்கியம்... உங்க மனசு கஷ்டப்படுமேங்கிற கவலைதான் எனக்கு...'' - சாரா நெகிழ்ந்திருந்தாலும் நிதானத்துடன்தான் சொன்னாள்.

சலீம் நிமிர்ந்தான்.

''அந்த தியாகத்திலே எனக்கும் பங்கு இருக்கட்டும்... உங்களைப் போலவே எனக்கும் மனப்பக்குவம் இருக்குங்க, சாரா... அல்லா போதுமானவன்!'' என்றான் அவன்.

மறுநாளே விடுமுறை நாட்களைக் கழிக்க சலீம் சொந்த ஊருக்குப் புறப்பட்டுப் போனான்.

சாரா ஓதி முடித்து தஸ்பீஹ் மணியை ஆணியில் மாட்ட எழுந்தபோது காலடியோசை கேட்டது. திரும்பினாள்.

காதர்பாட்சா!

கட்டம் போட்ட கைலியும், ஜிப்பாவும், மீசையும், அடர்ந்த தலைமுடியுமாக...

அர்த்தம் காணமுடியாத சிரிப்புடன்...

எதிர்பாராத நிலையில் அவன் வந்து நின்றதால் ஏற்பட்ட நடுக்கம் அடங்க இரண்டு நிமிஷம் ஆயிற்று.

''வாங்க.. மச்சான்!'' என்றாள் அடக்கமாக.



''வேற யாரும் இல்லே?'' என்று வினவியபடி சாராவைக் கவனித்தான்.

''இல்லே.. உக்காருங்க!''

''சாரா, உன்னைய பாக்கணும் போல இருந்திச்சி... அதனாலே...'' — அவன் இழுத்தான். இரண்டு எட்டில் உள்ளே வந்தவனை அமரச் சொன்னாள். அடுத்து என்ன பேசுவது, என்ன செய்வது என்று புரியவில்லை. மணந்து கொள்ளப் போகிற மாப்பிள்ளை அல்லவா?

''சாரா, எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோசம்!'' என்றான் காதர்பாட்சா.

''எதுக்காகவாம்...?''

''என்னைக் கட்டிக்க நீ சம்மதிச்சதுனாலே. அந்த சந்தோசத்தை என்னோட கூட்டாளிங்க அத்தினி பேரும் கொண்டாடினாங்க, தெரியுமில்லே...!''

— அவன் சிரித்தான்.

''மச்சான், இருங்க... டீ கொண்டாரேன்...!''

—சாரா நகர முயன்றாள்.

''சாரா, அதுக்கு முன்னாடி...''

''என்ன வேணும்?''

''சாரா, மனசைத் திறந்து சொல்லு... என்னையக் கட்டிக்க நெஜமாவே உனக்கு இஷ்டந்தானே?''

—இந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை.

''அல்லா நாடுறபடி எல்லாம் நடக்கும்... இப்ப எதுக்கு சந்தேகம்?''

''முதல்லே அம்மா சேதி சொன்னப்ப என்னாலே நம்ப முடியலே. உன்னைய அடையணுங்கிற ஆசையும், அது முடியாதுங்கிற வெறியும் இருந்திச்சு. நீ என்னையத் திரும்பியே பாக்க மாட்டேன்னு எப்பவோ தீர்மானிச்சிருந்தேன்...''

''இப்ப எதுக்கு அதையெல்லாம் கிளர்றீங்க?'' என்றாள் சாரா.

''சாரா, உன்னோட சம்மதம் கெடைச்சதும் எனக்கு சந்தோசத்திலே தலைகால் புரியலே. அம்மாவைத் துருவித் துருவிக் கேட்டப்ப என்ன சொல்லிச்சு தெரியுமா? 'சாரா உன்னைக் கட்டிக்கச் சம்மதிச்சதுக்கு நான் போட்ட ஒரு கட்டு தாண்டா காரணம். அதாண்டா, 'குர்பானி'யா நெனைச்சி இதுக்கு சம்மதிச்சிருக்குடா சாரா'ன்னு சொன்னாங்க...''

— காதர்பாட்சா அவனைக் கவனிக்க, சாராவும் அவனைப் பார்த்தாள்.

''சாரா, 'குர்பானி'ன்னு அம்மா சொன்ன வார்த்தை என்னைக் குத்திட்டது. மதரஸாவுலே நான் ஓதிக்கிட்டிருந்தப்ப ஹஸரத் 'குர்பானி'யைப் பத்தி சொன்னதை மட்டும் நான் இன்னும் மறக்கலே. தம்மோட ஒரே மகன் இஸ்மாயீலை அல்லாவுக்காக 'குர்பானி' குடுக்க — பலியிட, இபுராகீம் நபி முன்வந்தாங்க இல்லியா...?''

''ம்... சொல்லுங்க!'' என்றாள் சாரா.

''சொல்ல முடியிலே சாரா... உன்னைய 'குர்பானி' குடுக்க நீ முடிவு செஞ்சது...''— அவன் தழுதழுத்தான்.

''அது ஒண்ணும் தப்பு இல்லையே!''

''எது சரி, எது தப்புங்கிறதை இவ்வளவு காலத்துக்குப் பெறகு உன் மூலமா அல்லா புரிய வச்சிட்டான், சாரா! இதுநாள் வரைக்கும் மதம் புடிச்ச யானையா திரிஞ்ச என்னை அங்குசம் எடுக்காம, ஆயுதம் இல்லாம, 'குர்பானி'ங்கிற தத்துவத்தாலேயே அடக்கி ஒடுக்கிட்டே. அதனாலே என்னோட கெட்டதுகளை ஒட்டுமொத்தமா 'குர்பானி' குடுத்துட்டேன் சாரா!''

அவளால் நம்ப முடியவில்லை.

''சாரா, எனக்காக அல்லாகிட்டே இன்னும் 'துவா' கேளு. இனிமே நான் ஒனக்கு மச்சான் இல்லே...அண்ணன்!''

காதர்பாட்சா முடிக்குமுன் சாராவின் கரங்கள் உயர்ந்தன. ஏந்திய கைகளை அல்லா வெறுமனே திருப்பியனுப்புவதில்லையே!

— இதயம் பேசுகிறது : 1980



# நோன்பு 4

'ஆயிஷா என்ன பண்ணியிருக்கா பாத்தியா?'

— அம்மா சினந்து வெடித்துக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு வெளியே எட்டிப் பார்த்தான் ரசாக்.

'என்ன பண்ணியிருக்கிறாள்?'

அவன் கேட்கவில்லை. அம்மாவின் முகம் சிவந்திருக்கிறது. அவமதிப்புக்கு ஆளான மாதிரி நினைக்கிறாள் என்பது புரிகிறது.

''நாம அனுப்பி வச்சதைத் திருப்பி அனுப்பியிருக்கா, பாத்தியா?'' எம்புட்டு ராங்கி யிருக்கும் இவளுக்கு?''— தாயின் ஆத்திரம் தணிந்தபாடில்லை.

ஆயிஷாவுக்கு அனுப்பப்பட்டிருந்த சாப்பாட்டை அவள் திருப்பியனுப்பியிருக்கிறாள்; அவ்வளவுதான்.

சாப்பாட்டு அடுக்கைப் பார்த்தபடி, ''அந்தப் பொண்ணு எதுக்காகத் திருப்பி அனுப்பியிருக்கு?'' என்று முணுமுணுப்பாகக் கேட்டான்.

''சாக்குப்போக்குக்கு ஒண்ணும் குறைச்ச இல்லே... நோம்பு வச்சிருக்காளாம்!''

''நோன்பா? இப்ப எதுக்கு...?''

''அவளைத்தான் கேக்கணும். அடக்க ஒடுக்கமானவளா யிருப்பான்னு நெனைச்சேன். அகங்காரம் பிடிச்சவ... பிரியத்தோட அனுப்பி வைச்ச சோத்தை முகத்திலே அடிக்கிற மாதிரி திருப்பிவுட்டுருக்காளே. ஒரு தராதரம் தெரிய வேணும்......?''

ஆத்திரம் தீராமல் அம்மா பேசிக் கொண்டேயிருக்கிறாள். ஆற்றாமையோடு அறைக்கு வந்தான் ரசாக்.

இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க, முருங்கைப் போத்து மாதிரி ஒல்லியான மாநிறமுள்ள ஆயிஷா என்ற பெண் தன் வீட்டுக்கு வரப் போக இருக்கிறாள் என்பது போன வாரம்தான் ரசாக்குக்குத் தெரியும். பிற்பகல் நேரம் முகம் கழுவிக் கொள்வதற்காக வீட்டின் பின்கட்டுக்குச் சென்ற போது, கூடத்தில் சற்றே சரிந்த முக்காட்டுடன் ஒரு கோரைத்தடுக்கில் அந்தப் பெண் உட்கார்ந்திருக்க, எதிரில் அமர்ந்து அரபுப் பாடம் கேட்டுக் கொண்டிருந்தாள் ரசாக்கின் தங்கை மகள் ஜரீனா.

தன்னுடைய காலடியோசை கேட்டதும் அவள் நிமிர்ந்ததைக் கவனித்தான். இருவரின் பார்வையும் குத்திட்டு நிற்க, ஜரீனா ஒன்றும் புரியாமல் ஆயிஷாவை வெறித்துப் பார்க்க, ரசாக் வந்த வழியே திரும்பினான். ரொம்பவும் சாந்தமான அவளுடைய பார்வை அவனைப் பின்தொடர்ந்தது.

அந்தப் பெண் யார்? நிச்சயம் உள்ளூர் பெண் அல்ல. அவனுக்குத் தெரிந்து அந்த வயதில் 'ஓதிக் கொடுக்கும்' பெண் யாரும் ஊரில் இல்லை. தான் வெளிநாட்டிலிருந்த பல வருஷங்களில் ஆயிஷா இங்கே வந்திருக்க வேண்டும். வாழ்க்கைப்பட்டவளைப் போல் வாளிப்பாகத் தோன்றவில்லை. வயிற்றுப் பிழைப்புக்காக ஓதிக் கொடுத்துக் கொண்டிருக்கலாம்.

பேச்சுவாக்கில் கேட்பது போல் அம்மாவைக் கேட்டான்:

''நம்ம ஜரீனாவுக்கு ஓதிக் குடுக்க ஆள் அமர்த்தியிருக்கிறீங்களா அம்மா?''

''ஆமா ரசாக்கு...அந்தப் பொண்ணு ஆயிஷா இருக்கே......''

''அசலூர் பொண்ணா?'' என்றான்.

'ஆமாம்' என்ற தலையசைப்புடன் ஆரம்பித்துவிட்டாள் தாய்.

''வந்து வருஷம் ஒண்ணாச்சு. பொண்ணுங்க மதரசாவுலே ஓதிக் குடுக்குது. அத்தோட ஒழிஞ்ச நேரத்துலே நம்பளை



மாதிரி யாராச்சும் ஓதிக் குடுக்கக் கூப்புட்டா வூட்டுக்கு வந்துட்டுப் போவுது. கொஞ்ச நாளா இங்கே வரப்போக இருக்கு. ஊமைப் பொண்ணாட்டம் ரொம்ப சாது. வார்த்தையை எண்ணி எண்ணிப் பேசும்!''

சரியான படப்பிடிப்புதான் என்று தீர்மானித்துக் கொண்டவன், மேலும் விவரம் கோரும் பாவனையில் அம்மாவைப் பார்த்தான்.

''ஒரு நாள் துருவித்துருவிக் கேட்டதிலே அந்தப் பொண்ணோட கஷ்ட நஷ்டம் தெரிஞ்சுது. அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஆயிஷாவுக்குப் பரிசம் போட்டு கல்யாணம் நிச்சயம் செய்தாங்களாம், சொந்தத்திலேயே மாப்பிள்ளை. ஆனா, நிச்சயம் பண்ணின கல்யாணம் நடக்காம போச்சாம்.''

—அம்மா பேச்சை நிறுத்தியிருந்த ஒரு நிமிஷ நேரம் ரசாக்கின் மனம் என்ன பாடுபட்டுவிட்டது!

''ஏன்? என்ன ஆச்சாம்? அந்த மாப்பிள்ளைக்கு ஏதாச்சும் ஆபத்தா?'' என்றான் படபடப்புடன்.

''இல்லே. பெரும் பணத்தை கைக் கூலியா குடுத்து நகை, நட்டு, சீதனம் ஏராளமா தர்றதா சொன்ன இடத்திலே அந்தப் பையன் கல்யாணத்தை முடிச்சிட்டானாம். ஆயிஷாவும், அவளைப் பெத்தவங்களும் அவமானத்திலே நொறுங்கிப் போயிட்டாங்களாம். அன்னிலேருந்து இந்தப் பொண்ணுக்கு ஒண்ணும் நடக்கலே. பெத்தவங்க போனதும் ஓதிக் குடுத்து வயித்தைக் கழுவிக்கிட்டிருக்கு.''

ஆயிஷாவுக்காக ரசாக் இரங்கினான். அம்மாவும் கூட அநுதாபத்துடன்தான் பேசினாள்.

அந்த அநுதாபமும் பரிவும் இன்றைக்குப் போன இடம் தெரியவில்லை. ஆயிஷாவின் மீது இத்தனை சீற்றமா? நிலைமையைப் பார்த்தால் 'இனிமேல் ஆயிஷா இந்த வீட்டு வாசலை மிதிக்கக் கூடாது' என்று அம்மா தடை உத்தரவு போட்டு விடுவாளோ! சும்மா இருந்த பள்ளி வாசல் நகராவைத் தட்டி ஊரைக் கூட்டின மாதிரி ஒரு பிரச்னை உருவாகிவிட்டது.

ஆயிஷா ஏன் இப்படி நடந்துகொள்ள வேண்டும்? விதிக்கப்பட்ட ஒரு மாத காலம் நோன்பிருப்பது நியதி. அல்லாத சமயத்திலும் அவள் நோன்பிருக்கிறாள் என்றால் .....?

குழம்பிக் கொண்டிருந்தான். அது தேவையற்ற குழப்பமென்று புறக்கணித்துவிடவும் முடியவில்லை.

சொல்லி வைத்த மாதிரி இரண்டு மூன்று நாட்களாக ஆயிஷா வீட்டுக்கு வரவேயில்லை.

அம்மா நடவடிக்கை எடுத்திருக்கிறாள் போலிருக்கிறது என்று ரசாக் நினைத்தான். தங்கை மகள் ஜரீனாவை அழைத்து விசாரித்தான். சொல்லத் தெரியவில்லை. சொல்லியனுப்புகிற சமயத்தில் வந்தால் போதும் என்று ஆயிஷாவுக்குத் தகவல் போயிருப்பது தெரிய வந்தது. ஆக, அவள் என்றைக்கு வருவாளோ தெரியாது.

ஆயிஷாவை நினைத்தபடி இருக்கிறது மனம் ஏன்? அவள் மீது ஆசையா, காதலா? இல்லை, அப்படி நினைக்க முடியவில்லை. அடிக்கடி அவள் நோன்பிருக்கிறாளாமே, ஏன்? அதை நோன்பு என்று சொல்வதா, இல்லை 'பட்டினி' என்பதா?

ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் போதும். தெரிந்துகொண்டு விட்டால் தெளிவும் நிம்மதியும் ஏற்படும் போல் இருந்தது. அது முடிகிற காரியமா?

வீடு வெறிச்சென்றிருக்கிறது. அநேகமாக இப்படிப் பல நேரங்கள் அம்மாவும் தங்கையும் அடிக்கடி வெளியே கிளம்பிப் போய் விடுகிறார்கள். பெண் பார்க்கும் படலம். பக்கத்து ஊர்களில் வலை போட்டுப் பார்க்கிறார்கள். இதுவரை பல பெண்களைப் பார்த்தாயிற்று. வலிய வருகிற இடங்கள் ஏராளம். ரசாக் பயணத்திலிருந்து வந்து ஒரு மாதம் ஆகப் போகிறது. வந்த மறுநாளேகூட கல்யாணத்தை முடித்திருக்க முடியும். இல்லை. பெரிய பேரம் சம்பந்தப்பட்டிருக்கிறதே! பாஸ்போர்ட் வைத்திருக்கும் மாப்பிள்ளை அவன்...

பெரிய விலை உண்டு. அதற்காகத்தான் இத்தனை நாளாய் வலை. நேற்றுவரை முடிவாகவில்லை. இன்றைக்கு ஒரு தீர்மானத்துக்கு வந்து விடலாம் என்று தாயும் தங்கையும் பேசிக்



கொண்டிருந்தார்கள். அதற்காகவே கார் அமர்த்திக் கொண் பெண் பார்க்கப் போயிருக்கிறார்கள், அவனை மட்டும் வீட்டில் உட்கார வைத்துவிட்டு!

நெற்றிப் பொட்டை அழுத்தியபடி ரசாக் சிந்தனைவசப்பட்டிருந்தபோது வாசலில் நடமாட்ட அரவம் கேட்டது. தொடர்ந்து, 'ஜரீனா!' என்ற மெல்லிய அழைப்புக் குரல். யார்?

ரசாக் அறையிலிருந்து வெளியே வந்தான்.

சுவாதீனமாக உள்ளே வந்துவிட்டுப் பதில் சொல்ல யாரும் இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டவள் போல் அந்தப் பெண் திரும்பிச் செல்ல எத்தனித்தாள். ஆயிஷாவேதான்!

ஒரு சித்திரத்தின் மொத்த உருவையும் பார்ப்பது போல், ரசாக் ஆயிஷாவைப் பார்த்தான்.

நொடியில் அவள் திரும்பிப் போய் விடுவாளோ என்ற துடிப்பு. எப்படி நிறுத்தி வைப்பது எனும் பரபரப்பு.

''கொஞ்சம் இருங்க..!''—எப்படியோ வார்த்தை வந்து விட்டது.

ஆயிஷா திடுக்கிட்டு நின்றாள்.

''ஜரீனா.. உள்ளே...யாராச்சும்...''

— ஆயிஷாவின் குரல் இடறியது.

''இல்லே, யாரும் இல்லே.''

''அப்ப நான் வர்றேன். நான் வந்துட்டுப் போனதாக...'' அவள் பார்வை தரையில்தான் இருந்தது.

''உங்ககிட்டே ஒண்ணு கேக்கணும்...'' என்றான்.

விவரம் கேட்கும் விதத்தில் ஆயிஷா சற்றே நிமிர்ந்து பார்த்தாள். நேருக்கு நேர் பார்வை ஒரு நிமிஷம் கலந்தது.

''அம்மாவுக்கு உங்க மேலே கோபம்......'' என்றான்.

''இருக்கும்!''

''அன்னிக்கு சாப்பாட்டைத் திருப்பி அனுப்பினது...''

''காரணம் சொல்லியனுப்பினேன்''

''பொருத்தமா இல்லையே!''

''நோன்பு வச்சவங்க விருந்துச் சோறு சாப்பிடவா முடியும்?''

''காலம் இல்லாத காலத்திலே நோன்பு வைக்கிறதுக்குக் காரணம்?''

''அது எனக்குப் பழக்கம்...''

''எதுக்காக?''

''உங்களுக்குத் தெரிஞ்சிருக்கலாம்''

''இல்லே, தெரியாது''

''ஒழுக்கமுள்ள ஒரு பெண்ணாக நான் இருக்கணும் கிறத்துக்காக.''

ஒன்றும் புரியாமல் நெற்றியைச் சுருக்கிக் கொண்டான். ''அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?'' என்றான்.

ஆயிஷா நிமிர்ந்தாள்.

''வழியில்லாதவங்களுக்கு இது ஒரு வழி. ஆமாம். கல்யாணம் பண்ணிக்க வசதி இல்லாத வறியவங்க இச்சையைக் கட்டுப்படுத்திக்கிட்டு ஒழுக்கமா வாழறத்துக்கு, கற்பைக் காப்பாத்திக்கிறத்துக்கு நோன்பு வைக்கிறதுதான் வழின்னு குர்ஆன்லே ஆண்டவன் சொல்லியிருக்கான் ''

அவள் தணிவாகத்தான் சொன்னாள். தணலைத் தன்மேல் வாரிக் கொட்டியது போல் இருந்தது அவனுக்கு.

பேச நா எழவில்லை. மெல்ல தலையெடுத்துப் பார்த்தான்.

இருபத்தைந்து வயதில் இளைத்துக் களைத்துப் பற்றுக் கோடில்லாத தனிக் கொடியாக நின்று கொண்டிருக்கிறாள் ஆயிஷா. நோன்புதான் இவளுக்குக் காவலாம், கற்புக்குக் கவசமாம். கன்னி கழியாமல் தன்னை வதைத்துக் கொண்டு நோன்பிருக்கும் இவளைப் போல் எத்தனை ஆயிஷாக்கள்...!

அவள் நோன்பிருப்பது கற்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டுமல்ல, கல் நெஞ்சம் படைத்தவர்களின் கண்களைத் திறக்கவும்தான்.



ரசாக்கின் கண்கள் இப்பொழுது நுங்காக உடைந்து கசிந்தன.

உள்ளுக்குள் ஓர் ஒத்திகை நடந்தது.

ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாக, 'ஆயிஷா...!' என்ற முனகலுடன், ஆவலோடு எதிரே பார்த்தான்.

அவள் அங்கு இல்லை. ஆனாலும் என்ன?

— ஆனந்த விகடன், 1980.

# கிளி 5

பொழுது நல்லபடியாகத்தான் விடிந்தது.

சந்தடி சலசலப்பு இல்லாமல் எட்டு மணி வரைக்கும் அடுப்படியில் ஆப்பம் சுட்டுக் கொண்டிருந்தாள் ஹபீபா.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அவளை அலைக்கழிக்கும் புயல் நெருங்கி வந்தது, கேணிக்கரை வீட்டு சைத்தூன்பீவியின் உருவத்தில்.

வாடிக்கை ஆப்பம் வாங்க வந்தவள், ''யக்கா பாத்திமுத்து, வெசயம் தெரியுமில்லே...?'' என்று ஆரம்பித்தபோது ஹபீபா செவியைத் தீட்டிக் கொண்டாள். இவள் சுட்டு வைக்கும் ஆப்பத்தைக் கூடத்தில் உட்கார்ந்தபடி வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பாள் தாய்க்காரி — பாத்திமுத்து.

''காலங் காத்தாலே என்ன வெசயம் சொல்லப் போறே?'' என்றாள் பாத்திமுத்து.

''பெரிய வவுத்தெரிச்சலாச்சுதே... அப்துல்கரீமோட நசீபு இப்படியா ஆவணும்? அந்தப் புள்ளைக்கு இப்படி ஆயிருக்கப்புடாது. நாம கவலைப்படுறதாலே போனது திரும்பி வந்துடப் போவுதாங்காட்டியும்...சரி, பத்து ஆப்பம் எண்ணி வச்சிட்டியாக்கா?''

ஹபீபாவுக்குப் பொறுக்கவில்லை. கரீமுக்கு ஏதோ ஆகியிருக்கிறது என்று சைத்தூன்பீவி சொல்கிறாளே, என்ன நடந்திருக்கும்? ஆப்பச் சட்டிக்குள் கையை விட்ட மாதிரி மனம் உதறிக் கொள்கிறது. எழுந்து போய் என்ன நடந்தது என்று சைத்தூன்பீவியை இடைமறித்துக் கேட்க வேண்டும் போல் ஹபீபாவுக்குத் துடிப்பு.

''கரீமுக்கு என்ன ஆச்சுண்டு சொல்லேன் சைத்தூன்?'' அம்மாவே கேட்டு விட்டாள்.

''தோப்புத் தெருவே தூள் பறக்கு தாங்காட்டியும்...'' என்று திகில் மூட்டிவிட்டு நடந்ததைச் சொல்லிவிட்டுப் போகிறாள் சைத்தூன்: அவ்வளவுதான்; நிலைகுலைந்து போனாள் ஹபீபா.

இந்த முஹர்ரம் பிறந்தால் சரியாக ஆறு வருஷம் முடிந்து விடுகிறது. கரீம் கைவிடப்பட்டதும், ஹபீபாவுக்குக் கல்யாணம் நடந்ததும் ஆறு வருஷக் கனவு. அக்னிக் கனவு.

இவளுக்கு அவன்தான் மாப்பிள்ளை என்பது ஊரே அறிந்துவிட்ட சங்கதி, அவனுக்கு ஏனோ சம்சயம்—

''ஹபீபா, என் மனசிலே ஒரு அச்சம் இருந்துக் கிட்டேயிருக்கு!'' —ஒரு நாள் அவன் அதை வெளியிட்டான்.

''ஒங்களுக்கு எதுக்காக பயமாம்? ஆம்பளையாச்சே!''

''இன்னொரு ஆம்பளை ஒன்னை தட்டிக்கிட்டுப் போயிடுவானோண்டுதான் பயந்துக்கிட்டிருக்கேன்.''

''பொம்பளையாட்டம் பேசப்புடாது. எதுக்காக இப்படி நடுங்குறீங்க?''

''என்னோட நேரம் காலம் சரியில்லாத மாதிரி இருக்கு. நல்ல வேலைவெட்டி இல்லே...காதிலே வுளுவுற சேதிங்களைக் கேட்டா...!''

''சொன்னாத்தானே விளங்கும்!''

''ஊர்லேயே நீதான் ரொம்ப அழகியாம். சுல்தானு மாட்டம் இருக்கியாம்... யாராச்சும் பணக்காரப் புள்ளைங்க பாத்துட்டா கொத்திக்கிட்டுப்போயிடுவாங்களாம்!''

''என்னைப் பாருங்கண்டு நான் எதிராப்போலே போயி நிற்பேனுக்கும்...ஓங்க புத்தி ஏன் இந்தப்படிக்குப் போவுது?''

''எங்கே நீ எனக்கு இல்லாம போயிடுவியோண்டுதான்!''

''என்னிக்கிருந்தாலும் இந்த ஹபீபா உங்களோட உடைமைதான்.''

அவளுடைய உறுதி கரீமை நிமிர்த்தியது.

ஹபீபா அவனுக்கு உடமையாகக் காத்திருந்தாள்.

விஷப் புகை தூவி, அந்த உறவை வேரறுப்பதற்கென்றே மைதீன் வந்தான். யாரும் எதிர்பார்த்திராத பிரவேசம்.

''பக்கத்து ஊர்லே ரொம்ப வசதியான எடம். கப்பல் காடிக்குப் போற மாப்பிள்ளை. ஹபீபாவை முடிக்கணுமிண்டு ஒத்தைக் கால்லே நிக்கிறார். பத்து நாள்லே 'நிக்கா' பண்ணிடலாமிண்டு சொல்றாங்க நானும் சம்மதம் குடுத்துட்டேன்..''

— தகப்பனார் சொன்னார். ஹபீபா துவண்டு விழுந்து விட்டாள்.

''அது எப்படிங்க முடியும்? இந்தப் பொண்ணு கரீமை நெனைச்சுக்கிட்டு வருஷம் வருஷமா காத்துக்கிட்டிருக்கே'' என்றாள் அம்மா,

''உள்ளதுதான். ஆனுக்கா ஒத்துவரக் கூடியதில்லையே. வேலை வெட்டி தேடுறேண்டு பம்பாய்க்குப் போனவன் போனதுதான். அவன் காசு பணத்தோட திரும்புறது எப்போ, ஹபீபாவைக் கல்யாணம் முடிக்கிறது எப்போ...? அவன் வருவானோ இல்லியோ, யார் கண்டாங்க. சொத்து சொகத்தோட மாப்பிள்ளை கெடைக்கிறப்போ எதுக்காக ஒதறிவுடணும்?''

எந்த எதிர்ப்பும் பலனளிக்கவில்லை..

திடீரென்று எதிர்ப்பட்டுத் தன்னை மீட்க வரமாட்டானா என்று ஒவ்வொரு நொடியும் எதிர்பார்த்துத் துடித்துக் கொண்டிருந்தாள். கரீம் வரவில்லை.

தாமதிக்காமல் மகளை மணவறைக்கு அனுப்பி விட்டார் தந்தை.

மாப்பிள்ளை மைதீன் சொன்னான்: ''ஒன்னை அடைஞ்சே தீருவேன் அப்புடீண்டு பந்தயம் போட்டேன்,அடைஞ்சாச்சு. நெனைச்சதை முடிக்கிறவன் இந்த மைதீன் அப்படீங்கிறது இந்தப் பயலுவளுக்கு இப்பத்தான் புரிஞ்சிருக்கு. நீயும் புரிஞ்சுக்கணும்...''

அவனைப் புரிந்து கொள்ள ஹபீபாவுக்கு நாளாகவில்லை.

''ஒனக்கு நான் எப்புடிக் குறிவச்சேன் தெரியுமில்லே? ஒங்க ஊர் சுந்தூரிக்கு வாலிபப் பயலுவளோட வந்தப்பத்



தான் பாத்தேன். விசாரிச்சேன். நீ கெடைக்க மாட்டேண்டு சொன்னானுவ. சவாலா எடுத்துக்கிட்டேன். காசை வீசி எறிஞ்சா நூறு ஹபீபா வருவாளுங்கண்டேன்.''

அவனுடைய பிரதாபங்கள் ஹபீபாவுக்குப் பயங்கரமாக இருந்தன. 'லாட்டரி மைதீன்' என்று நாலு பேர் பேசுகிற அளவுக்கு அவனுக்கு மலேசியா லாட்டரியில் சில முறை பரிசு கிடைத்திருக்கிறது என்பது உண்மைதான். அந்தப் பணத்தோடு கூடவே வேண்டாத அத்தனையும் சேர்ந்து கொண்டிருக்கிறதே...ஏற்கெனவே இரண்டு கல்யாணம் ஆகி அந்தப் பெண்களைத் தீர்த்து விட்டிருக்கிறான் என்பதும் ஹபீபாவுக்குத் தெரிய வந்தது.

ஹபீபாவின் அழகும் கவர்ச்சியும் மைதீனுக்குத் தேவைப்பட்டது. அந்த இச்சையும் வெறியும் இரண்டே மாதம்தான். சுசக்கி முகர்ந்து விட்டுக் கப்பல் ஏறி வருஷம் ஆறு ஆகிறது. ஒரு வரி கடிதம் இல்லை. ஒரு ரூபாய் காசு வந்ததில்லை. அன்றைக்குத் தாய் வீட்டுக்கு வந்தவளுக்கு இப்பொழுது 'ஊரில் பெயர், ஆப்பக்கார ஹபீபா!

இந்த வேதனை தாளாமல் ஹபீபாவின் தகப்பனார் காலமாகி மூன்று வருஷம் ஆகிறது.

கரீமின் நினைவு மோதி முழங்குகிறது...

அப்பொழுது ஒரு நாள் மாவரைத்துக் கொண்டிருந்த சமயம் அவன் வந்து எதிரே உட்கார்ந்து ஆட்டுக்கல் குழவியைப் பிடித்தான். கை, அவள் கை மேல் பதிந்திருந்தது.

''எடுங்க கையை...!''

''நெஜமாத்தான் சொல்றியா, ஹபீபா?''

''பின்னே? அப்பப்ப வந்துட்டுப் போக பெத்தவங்க அனுமதிச்சா அத்து மீற ஆரம்பிச்சுட்டீங்களே...கன்னிப் பொண்ணோட கையை, மெய்யைத் தீண்டுறது பாவம், தெரியுமில்லே?''

''நான் கைபிடிக்கப் போற பொண்ணு இல்லையா? சரி... இப்ப நீ ஒக்கார வேணும்... எந்திரிச்சி அப்பாலே போ. நானே மாவரைச்சிக் குடுத்துட்டுப் போறேன்.''

''ரொம்பத் தெரிஞ்ச மாதிரிதான்!''

— ஹபீபா சிரித்தாள்,

''தெரிஞ்சு வெச்சுக்கலேண்டா நாளேக்கு எனக்குத்தான் ஆபத்து.''

கரீம் மாவரைத்த வேகத்தைப் பார்த்து ஹபீபா நெற்றியைச் சுருக்கினுள்.

''இம்புட்டு வேகம் ஆகாது'' என்ருள்.

''ஒன்னேட கடைக்கண் பார்வைக்கு அம்புட்டு சக்தி இருக்கு ஹபீபா. மலேயே கடுகாத் தெரியும்.''

''சரி மாவரைச்சது போதும். யாராச்சும் பாக்குறதுக்கு முன்னுடி நடையைக் கட்டுங்க!''

''எம்புட்டு நாளேக்கு என்னே வெரட்டுவே இப்புடி? பம்பாய் போறேன். திரும்பி வந்து பேசிக்கிறேன்'' என்ற வாறு அவன் எழுந்து போனுன். ஹபீபாவுக்கு மனமில்லே. அவனே அருகில் அமர்த்தி வைத்துப் பேசிக் கொண்டே இருக்கலாம் போல் ஆவல். அதற்கு வேளே வர வேண்டுமே!

காத்திருந்தாள். இலவு காத்த கிளியாக நேரிடும் என்று நினேத்திருக்கவில்லே. அவள் கழுத்தில் தாலி ஏறிய சில மாதங்களுக்குப் பிறகு ஊர் திரும்பிய கரீம் செய்தியைக் கேட்டது தான் தாமதம், வந்த வேகத்தில் திரும்பி விட்டான். அவன் எங்கே போனுன் என்பது ஹபீபாவுக்குத் தெரியாது. துபாய்க்குப் போய்க் கட்டட நிர்மாண வேலேயில் எடுபிடியாகச் சேர்ந்திருக்கிறுன் என்ற தகவல் கிடைத்தது.

நிர்ப்பந்தமாகத் திரும்பியிருக்கிறுன், இப்பொழுது. இந்தச் சோதனே கரீமுக்கு நேர்ந்திருக்கக் கூடாது என்று நெஞ்சம் உருகிக் கொண்டிருக்கிறுள் ஹபீபா.

கூண்டுக்கிளி! ஹபீபாவின் நிலே அப்படித்தான் இருக்கிறது. ஆறு வருஷமாக அதே நிலே......

ஹபீபாவுக்கு எப்படியோ துணிவு வந்திருக்கிறது. சிறகு விரித்துப் பறக்க வேண்டும் போல் மனத்தில் எழுச்சி.



''அம்மா.....தோப்புத் தெரு வரைக்கும் போயிட்டு வரேன்.''-தாயிடம் சொன்ன போது ஹபீபாவுக்கு நடுக்கமோ, இறுக்கமோ இல்லே. புரிந்து கொண்டு விட்டாள் அம்மா.

''ஒன்னேட பிரியம்...!'' அதற்கு மேல் வார்த்தை இல்லே.

இந்தத் துணிச்சல் எப்படி வந்தது என்பதில் ஹபீபாவுக்கே வியப்பு.

சைத்தூன் பீவி சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை வீட்டில் நுழைந்த மாத்திரத்தில் ஹபீபா உணர்ந்து கொண்டு விட்டாள்.

அவள் சொன்ன நிலேயில்தான் கரீம் இருக்கிறுன். கட்டிலில் முடங்கியிருப்பவனேக் காணப் பொறுக்கவில்லே ஹபீபாவுக்கு.

காலடியோசை கேட்டதும் ''யார்?'' என்ற குரல். ஆறு வருஷத்திற்குப் பிறகு அவள் கேட்கும் குரல்.

''நான்தான்...ஹபீபா!''

''ஹபீபாவா!'' — அவனுக்கு நம்ப முடியாத வியப்பு.

''ஆமாம், வந்திருக்கேன்.''

மௌனம்.

''ஒரு சேதியும் தெரியாது. அதனுலே நீ வந்திருக்கிறதா சொன்னதும் நம்பமுடியலே, ஹபீபா...''

''என்னுலேயும் நம்பத்தான் முடியலே... இப்புடி ஆகுமிண்டு நெனேச்சிக் கூட பாக்கலேயே...!'' — ஹபீபா நெகிழ்ந்து போகிறுள்.

''நடக்குறதுதான் நடக்கும் ஹபீபா.''

''இன்னும் என்ன நடக்கணும்? இந்தக் கோலத்திலே ஒங்களே நான் பாக்குறப்போ...''

''ஹபீபா! எனக்கு எது ஆனுக்கா என்னு? ஒன்னேட சந்தோஷந்தான் எனக்கு முக்கியம்.''

''நான் அப்புடி இருக்கிறதா நீங்க நெனைச்சிருந்தீங்களா?''

''இல்லையா?''

''இங்கே ஓடியாந்திருக்கேனே, எதுக்குண்டு தெரியுமில்லே?''

கரீம் விவரம் கோரவில்லை.

''ஒங்களுக்கு இன்னொருத்தர் ஒத்தாசை இனிமேலே தேவையில்லையா?''

''அதுக்காக?''

''கட்டிலையே உலகமாக்கிக்கிட்டு நடமாட முடியாம அடங்கிப் போன ஒருத்தருக்கு சேவை செய்யலாமிண்டு முடிவு செஞ்சிட்டேன்.''

''அது என்னோட நசீபு... விதி. ஒனக்கு இப்ப என்ன ஆச்சுங்கிறே?''

''எல்லாமே ஆயிப் போச்சு!''

ஹபீபா மௌனமாக நிற்கிறாள்.

''ஹபீபா, பொழைக்கப் போன எடத்திலே ரெண்டு காலையும் எளந்துப்புட்டு எதுக்கும் ஒதவாத பிண்டமா இங்கே வந்து ஒடுங்கிக் கெடக்கிறேன். எம் மேலே ஈவு, இரக்கம், பிரியம் இருக்குதுண்டா அதுக்காக ஒன்னோட வாழ்க்கையை அழிச்சிக்கணுமா? என்னாலே என்ன சொகம் கிடைக்கு மிண்டு நெனைக்கிறே?''

''சொகத்தைப் பத்தி கனவு கண்டவ இல்லே, இந்த ஹபீபா!''

''அது ஒனக்குக் கெடைக்கும், கட்டின புருஷன் ஒரு நாள் திரும்பி வர்றப்போ.''

''அந்த பந்தத்தை ஒதறிப்புட்டேன், மனசாலே. பெண்டாட்டியை நாலு மாசம் புருஷன் பராமரிக்கத் தவறிட்டா கல்யாணபந்தத்துக்கே அர்த்தமில்லேண்டு சொல்றாங்க. வருஷம் ஆறு ஆச்சு, ஒரு கடுதாசி இல்லே...ஒரு பிச்சைக்காசு இல்லே. ஆப்பக்காரி அப்புடீங்கிற பேரோட இத்தினி வருஷமா வயித்தைக் கழுவியாச்சு. இதுக்கு மேலே என்ன ஆவணும்? கூண்டுக்கிளியா இருந்தேன். அது போதும். குஞ்சுக்கு இரை ஊட்டுற கிளி மாதிரி இருக்கப் போறேன்... ஒங்களுக்குக் காலா இருக்கப் போறேன்.''

''ஹபீபா, இது வெஷப் பரீட்சை''

—கரீம் குமைந்தான்.

''இல்லே, விடுதலை... எனக்கு நானே தேடிக்கிற விடுதலை. மொறைப்படிக்கு என்ன செய்யணுமோ அதைச் செய்யப் போறேன்; செய்யப் போறோம்'' என்றாள் ஹபீபா.

**— ஆனந்த விகடன், 1979.**

# முள் 6

இது ஒரு தனி உலகம்!

ஆரவாரம் இல்லை. சந்தடி சலசலப்பு இல்லை. பிரச்சினை கள் புக முடியாத இடம். ஏனென்றால் இங்கே இருப்பவர் கள் அரும்பும், பூவும் பிஞ்சுமாக ஒரு நூறு குழந்தைகள்.

அவர்களைப் பராமரித்துப் பாடம் சொல்லித்தர சபியா உட்பட சில ஆசிரியைகள். தலைமைப் பொறுப்பில் அறுபதை நெருங்கப் போகும் ஆயிஷா அம்மாள் இருந்தாலும், அத்தனை பாரத்தையும் சுமந்து கொண்டிருப்பவள் சபியாதான்!

சுமையாக எதையும் கருதவில்லையா? எந்த நேரமும் இதழ் விரித்த ரோஜாவாகத்தான் இருக்கிறது சபியாவின் முகம். தாயைச் சுற்றும் சேய்களாக இந்த இல்லத்துக் குழந்தைகள் இவளைத்தான் வட்டமிட்டுக் கொண்டிருக் கின்றன.

இப்பொழுது விளையாட்டு நேரம். தொலைவில் மகிழ மரத்தடியில் குழந்தைகள் ஓடியாடிக் கொண்டிருக்கிறார்கள். சபியாவின் பார்வை அந்த மரத்தடியில் மையம் கொண் டிருக்கிறது. 'தனக்கும் ஒரு குழந்தை இருந்திருந்தால்...?'

இருந்திருக்கலாம். இருந்திருக்க வேண்டும். பாவம் பாலம் தகர்க்கப்பட்டு விட்டது!

எவ்வித பாதிப்பையும் சபியா காட்டிக் கொண்டதில்லை.

ஆனால் இப்பொழுது ஒரு பாதிப்பு!

அமைதியான இந்தத் தனி உலகத்தில் இன்றைக்குச் சபியாவுக்கு மட்டும் ஒரு சலசலப்பு.

காலையில் அவள் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. ஆயிஷா அம்மாள்தான் மௌனமாக அவளிடம் கடிதத்தை நீட்டினாள்.

அநேகமாக சபியாவுக்குக் கடிதங்களே வருவதில்லை. ஆனால் மூன்று வருஷங்களுக்கு முன்னால் நிலைமை வேறு.

பிரித்துப் பார் என்றோ, படித்துச் சொல் என்றோ வாய் திறக்கவில்லை ஆயிஷா அம்மாள். ஆனால் அந்தத் தலைவியின் பார்வை மட்டும், 'அப்புறமாக விவரம் சொல்கிறாயா?' என்று வினவும் பாவனையில் இருந்தது.

எதிர்பாராத கடிதம்...

வெகுநேரம் உட்கார்ந்து விட்டாள் சபியா. குழந்தை களின் விளையாட்டில் அவள் பார்வையிருக்கிறது. சன்னமாக உதிர்ந்து இறங்கும் மகிழம்பூக்களில் பார்வையிருக்கிறது. ஆனால் மனம்..

இருபத்து மூன்று வயதுவரை சபியாவும் இந்தக் குழந் தைகளில் ஒன்றைப் போலத்தான் இருந்தாள். ஆனால் பருவம் மட்டும் குமரி முத்திரை குத்திவிட்டிருந்தது.

'சபியாப் பொண்ணு இருக்க வேண்டிய எடம் இது இல்லே. ரோஜாப்பூவாட்டம் அழகு...யாருக்குக் கெடைக் கப் போகுதோ இந்த ரோஜாப்பூ!

—மற்றவர்கள் அவளை வருணித்தார்கள். நூற்றுக்கு நூறு உண்மை!

'அனாதைக் குழந்தைகள் இல்லத்தில் இப்படி ஒரு பெண்ணா? இடம் மாறிப் புஷ்பித்திருக்கும் மலரா?' வியப் போடு கேள்விக்குறியையும் தேக்கியபடி சபியாவின் எதிரில்-மூன்று வருஷங்களுக்கு முன்னால் — ஒரு நாள் நின்றிருந்தான் பஷீர்.

அவன் நகர்ந்த பிறகு ஆயிஷா அம்மாள் சபியாவின் காதைக் கடித்தாள்:

''இந்த பஷீர் பெரிய இடத்துப்பிள்ளை. நம்ம இடத் தைப் பத்தி கேள்விப் பட்டு வண்டியை எடுத்துட்டு வந்து பெரியதொகை குடுத்துட்டுப் போயிருக்கு... இந்த மாதிரி நாலு பெருந்தனக்காரங்க தாராளமா கைநீட்டினா கவலை யில்லாம விடுதியை நடத்தலாம்.''

—சரியாகத்தான் சொல்கிறாள் என்று அந்த நேரம் சபியா தலையாட்டினாலும், மனம் என்னவோ அதற்கு இசைவாக ஆட மறுத்தது. அவனுடைய பார்வைதான் காரணமோ?

இரண்டு நாட்களுக்குப் பிறகு பஷீர் மீண்டும் கார் எடுத்துக் கொண்டு வந்தான். அது இயல்பான வருகை என்று சபியாவின் மனம் ஒப்புக்கொள்ள மறுத்தது.

மூன்றாவது முறையாக அவன் வந்த போது கருமேகத் திட்டுகளாகப் பெரிய மூட்டம். சபியாவுக்கு மட்டுமல்ல, மொத்த விடுதிக்குமே!

''சபியா, நீ அதிர்ஷ்டக்காரப் பொண்ணு...இல்லேன்டா இந்த பஷீர் உன்னைய நிக்கா பண்ணிக்கத் துடிக்குமா? நானும் நல்லா யோசிச்சுப் பாத்தாச்சு. நீ என்ன சொல்றே?''

—ஆயிஷா கேட்டாள். மூன்று முறை பஷீர் விடுதியைத் தேடி வந்தது தனக்காகத்தான் என்பதை உணர்ந்திருந்தும் கூட, ''கல்யாணமா? எனக்கா...?'' என்று துடிப்போடு கேட்டாள்.

''ஆமா, சபியா! உன்னைய வெளியே அனுப்புறதுக்கு மனசு இல்லே. ஆனா வலிய வர்ற அதிர்ஷ்டத்துக்கு நாங்க தடையா இருக்கப்புடாது, பாரு நாள் குறிக்கிறதுதான் பாக்கி...''

''இல்லே. அவர்கிட்டே நான் பேச வேண்டிய பாக்கியும் இருக்கு!'' என்றாள் சபியா.

அதற்கும் ஏற்பாடாயிற்று. அனாதைக் குழந்தைகளின் விடுதியில் அவர்களோடு ஒருத்தியாக இருக்கும் தன்னை அவன் விரும்புவது சரியல்ல என்று எடுத்துச் சொன்னாள். தன்னை ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் அவன் வீட்டாருக்கு இல்லாமல் போகலாம் என்றாள்.

பஷீர் எதற்கும் பிடி கொடுக்கவில்லை. வெளிநாட்டில் தொழில் புரிகிறவன் என்பதால் அவளையும் அழைத்துப்போய் விடுவதாகச் சொன்னபோது சபியா மௌனமானாள்.



மணமாகி மலரும் மஞ்சமுமாக ஓர் அந்தரங்கமும் ஆவலும் ததும்பிக் கொண்டிருந்தபோது, கூடவே ஓர் அந்நியமும் குமிழியிடத் தொடங்கியதை சபியா உணர்ந்தாள். பஷீரைத் தவிர முகம் கொடுத்துப் பேசுகிறவர்கள் இல்லாமல் போனபோது, கத்தி முனையில் நடப்பது போல் நலிந்தாள்.

'ஊர் பேர் தெரியாத ஒரு எத்தீமை — அனாதையைக் —கூட்டியாந்துருக்கானே...!' —மகனின் செயலை நிந்தித்தாள் சபியாவின் மாமியார். மற்றவர்களின் பிலாக்கணமும் அதற்குக் குறைந்ததாக இல்லை.

தனக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள அதிக நாள் பிடிக்கவில்லை. முறையிட முடியுமா கணவனிடம்? இல்லை. வாய்திறக்கவில்லை சபியா. ஆனால் பஷீரின் தாகமும் மோகமும், வேகமும், ரசனையும் குறைந்ததாக இல்லை. தன்னை அவன் விரும்பிய காரணம் கண்கூடாகப் புரிந்தது அவளுக்கு.

பயணம் புறப்படும் நாள்வரை பஷீரின் பிடி நழுவவில்லை.

சீக்கிரமே திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டு அவன் புறப்பட்ட பிறகு, தன்னுடைய தனிஅறை எத்தனை பெரிய சிறை என்பதை உணர ஆரம்பித்தாள் சபியா. மாமியாரும் மற்றவர்களும் தொடுத்த கணைகள் அவள் நெஞ்சைத் துளைத்துக் குருதி கொட்ட வைத்தன. ஊமைக் காயங்கள், உள்ளுக்குள் ரணங்கள்...

நான்கு மாதம் நரகத்தில் இடர்ப்பட்ட மாதிரி இருந்தது. பஷீரிடமிருந்து ஆரம்பத்தில் ஒன்றிரண்டு கடிதங்கள். அப்புறம் சரளமும் சவுஜன்யமும் அற்றுப்போயின.

இறுகிப்போன முகத்துடன் அவன் திரும்பி வந்தான்.

''சபியா, நீ இப்படில்லாம் நடந்துக்குவேன்னு நான் எதிர்பார்க்கலே!''

''எப்படில்லாம்?''

''உன்கிட்டே ஒப்பிக்கணுமா? அம்மாவும் தங்கச்சிங்களும் லெட்டர்லே எல்லாத்தையும்...''

''எனக்கு ஒண்ணுமே தெரியாது.''

''எனக்குத் தெரிஞ்சாச்சு. அது போதும்!''

ஒரு வாரத்தில் நெருக்கடி முற்றியது.

''சபியா, நடந்தவரைக்கும் சரி... நான் முடிவுக்கு வந்தாச்சு.''

''எதுக்கு?''

''நாம வாழ்ந்தது போதும்!''

சபியா மருண்டு போனுள்.

''வேறவழியில்லே...நாம பிரிஞ்சிட வேண்டியதுதான். சட்டப்படி 'தலாக்' கொடுத்திடறேன்.''

நடுங்கி நின்ருள்.

''அப்படிச் சொல்லாதீங்க...''

''அதைத் தவிர மார்க்கம் இல்லே.''

''நான் விலகிப் போய்டறேன். கண் காணுத எடத்துக்குத் தள்ளிப் போயிடறேன். ஆனு 'தலாக்' சொல்லிடாதீங்க. உங்க பாதையிலே குறுக்கிடாமெ, சொந்த பந்தம் கொண்டாடாமெ, தொலே தூரத்துக்குப் போயிடறேன்...''

பஷீர் அவளுக்காக இரங்கவில்லே. இறங்கி வரவில்லே. அபலேயாக வெளியேறிஞளே, எத்தனே பெரிய கொடுமை!

சபியாவின் தனியுலகம் இப்பொழுது சலனப்பட்டிருக்கிறது.

எதிர்பாராத அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து எந்த நிமிஷமும் அவன் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. சபியாவைச் சந்தித்துப் பேசவேண்டுமாம்...

ஆயிஷா அம்மாளுக்கு நிலவரம் தெரிந்து விட்டது. 'வந்தால் சந்திப்பாயா, பேசுவாயா?'—பார்வையாலே கேட்டுவிட்டு, சபியாவின் மௌனத்தையே சம்மதமாகக் கருதியவளாக நகர்ந்து போனுள் அந்த அம்மாள்.

பஷீர் வந்தாயிற்று!



தனி அறையில் பலநாள், பல இரவுகள் உறவு கொண்டாடி – உணர்ச்சிகளேப் பிணேத்துத், தணித்துக் கொண்டிருந்தும்கூட, மூன்று வருஷத்துக்குப் பிறகு இப்பொழுது அவனேச் சந்திக்கும் போது சபியாவின் கண்ணும், மனமும், மெய்யும் கூசுகின்றன.

''சபியா! என்பேர்லே வெறுப்பும் விசனமும் இருக்கும்... நியாயம்...ஆனு, இந்த மூணு வருஷத்திலே நான் முழுசா மாறிட்டேன். எவ்வளவோ நடந்து போயிட்டது.''

—அவன் பேச்சைக் கேட்டபடி நிலத்தையே வெறித்துப் பார்க்கிருள் சபியா.

''எடுப்பார் கைப்பிள்ளேயா இருந்திட்டேன்! அம்மாவும் மத்தவங்களும் ஆட்டி வச்சிட்டாங்க. அதனுலே அநியாயமா உன்னேய இழந்துட்டேன். இப்ப நானும் ஓர் அனுதையா ஆனமாதிரி...''

— அவன் பேசிக் கொண்டிருந்தான். அவள் விவரம் கோரவில்லே.

''சபியா, நான் சொல்றதெல்லாம்...'' நிமிர்ந்தாள்.

''நான் ஒண்ணு கேக்கலாமா?''

தலேயாட்டினுள்.

''தப்பு நடந்து போச்சு. தண்டனேயை அனுபவிச்சுக்கிட்டிருக்கேன் சபியா...! பிழை பொறுத்துக்குவியா, சபியா? இப்ப ஒரு முடிவோடதான் வந்திருக்கேன்...''

பாவனேயிலேயே சொல்லச் சொன்னுள்.

''மறுபடியும் உன்னேய நான் அடையணும், சபியா! புதுசா வாழ்க்கையை ஆரம்பிக்கணும், சபியா...''

நேருக்குநேர் பார்த்தாள்.

''அது அவ்வளவு சுலபமா?''

''நீ மனசு வச்சா...''

''யார் மனசு வச்சாலும் எதுவும்...''

''உன்னேய வதைச்சுடாதே, சபியா...''

''இல்லே. நீங்கநான் வதைக்கிறீங்க. இன்னெரு பாதகத்துக்கு எண்ணெய் வார்த்துத் தூண்டி விடுறீங்க...''

''அப்படில்லாம் சொல்லாதே சபியா! பாதகத்துக்குப் பரிகாரம் தேடத்தான் வந்திருக்கேன்.''

''எது பரிகாரம்...? உங்களுக்கு நான் மறுபடியும் வாழ்க்கைப்படணும்னு இடையிலே இன்னெருத்தனுக்குப் பெண்டாட்டியாகணும். அவனேட மஞ்சத்தைப் பகிர்ந்துகிட்டு தாம்பத்தியம் பூர்த்தியானதும், அவனுலே 'தலாக்' சொல்லப்படணும். இது சட்டம்... ஆமா, உங்களை நான் அடையறதுக்காக ரெண்டாவது முறையா வேறெருத்தனுக்கு நான் தாரம் ஆகணும், அவன் கிட்டேருந்து 'தலாக்' வாங்கணும்... இதைச் செய்யச் சொல்றீங்களா. இல்லே சட்டத்தை மீறச் சொல்றீங்களா?''

—சபியாவின் குரலில் பிசிறு இல்லை.

''சபியா, நான்...நான்...''—அவனுல் பேச முடியவில்லை.

''அந்த சட்டம் சரியான சட்டம்தான்! விவாகரத்துங்கிறதை விளையாட்டா நெனைச்சி, சட்டையை மாத்திக்கிற மாதிரி கட்டின மனைவியை மாத்திக்கிறவங்க இருக்கறப்ப அந்த சட்டம் அவசியந்தான். இப்ப, சொல்லுங்க... உங்களை மறுபடியும் அடையறதுக்கு முன்னுடி இன்னெருத்தனுக்கு நான் தற்காலிகமா சுகம் கொடுத்துட்டு விடுதலை வாங்கிட்டு வரணும்னு எதிர்பாாக்கிறீங்களா? சொல்லுங்க...இப்ப நீங்க ஒரு தரகரா வந்து நிக்கிறீங்களா...இல்லே...?''

— சபியா முடிக்கவில்லை. பஷீர் விக்கித்து நின்றுன்.

''போயிட்டு வாங்க... பிரச்சினை இல்லாத இந்த இடத்திலே பிரச்சினையைப் புகுத்த வேணும்! என்னை மாதிரி பெண்களைச் சலனப்படுத்தாதீங்க... ச ஞ் ச ல ப் ப டு த் தா தீ ங் க. போயிட்டு வாங்க!''

—சபியா புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு திரும்பினுள்.

— **இதயம் பேசுகிறது, 1980**



# கிணறு 7

ஒரு கிசுகிசுப்பு.

''கரைச்ச சந்தன நிறத்திலே கண்ணுக்குப் பாந்தமா சிலையாட்டம் உலாவிக்கிட்டிருக்கிறுளே ஆயிஷாக்குட்டி, அவளுக்காகத்தான் இதெல்லாம்.''

ஜிலுஜிலுவென்று பல மாதிரி வருணிப்பு! ஆனுல், எதிரொலி பலமாக இருந்தது. மும்தாஜுக்குப் புகைச்சல்.

''முந்திரிமேட்டிலே கிணறு வெட்டுறீங்களே, இதுக்குத் தானு?''—மும்தாஜ் கணவனைக் கேட்டாள்.

மூசா பதில் சொல்லவில்லை.

''வாயை மூடிக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்? ஒண்ணுக்கும் உதவாத மேட்டுக் கரம்பையிலே கிணறு வெட்டுறதா சொல்லிக்கிட்டு அங்கேயே பொழுதுக்கும் உக்காந்திருக்கிறீங்களே, எதுக்காக? எல்லாம் இப்ப புரிஞ்சுபோச்சு...''

—மும்தாஜ், கணவனின் பதிலுக்குக் காத்திருக்கவில்லை. அன்று மத்தியானம் வரை வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த ஆயிஷாவை அழைத்தாள்.

''நீ வேற இடம் பார்த்துக்கலாம்... இப்பவே இங்கேருந்து நீ போகலாம்.''—ஆயிஷாவிடம், மும்தாஜ் பாய்ந்தது செவியில் மோதியது. மும்தாஜின் தீர்ப்புக்கு அப்பீல் கிடையாது.

தண்ணீர்க் குடத்துடன் குனிந்த தலை நிமிராமல் இவர்களின் வீட்டுக்கும் முந்திரிமேட்டுக்குமிடையே நடந்து போகும் ஆயிஷாவை அதற்குப் பிறகு பார்க்க முடியவில்லை.

நம்புவதற்குக் கஷ்டமாக இருந்தது. நம்பாமலும் இருக்க முடியவில்லை. முந்திரிமேட்டு விஷயத்தில் ஆரம்பத்திலேயே

முட்டுக்கட்டை போட்டவள் அவள். நூற்றுக்கு நூறு மும்தாஜின் பேச்சைத் தட்டாதவன் கிணறு வெட்டுவதில் மட்டும் விட்டுக் கொடுக்கவில்லை.

மேட்டுப்பாங்கான அந்த இடத்தில் விளைச்சல் கிடையாது. தண்ணீர் வசதி இல்லை. இவர்களின் வீட்டிலிருந்து அரை மைல் தூரம் இருக்கும். முந்திரிமேடு என்று யாரோ வைத்த பெயர் நிலைத்து விட்டது. பெயருக்கு ஒன்றிரண்டு முந்திரி மரங்கள் மட்டும் அங்கே உண்டு. மூசாவின் புஞ்சையை அடுத்த புறம்போக்கு நிலத்தில் ஒரு குடிசைக் காலனி உருவாகிப் பல வருஷம் ஆகிவிட்டது. நாற்பது குடும்பங்கள் இருக்கும். எல்லோருமே தொழிலாளிகள். தொழில்-குடைரிப்பேர், லாடம் கட்டுவது, ஈயம் பூசுவது, முடி எடுப்பது, கொடிக்கால் வேலை பார்ப்பது இத்யாதி. முந்திரிமேட்டுப் பெண்களுக்கு கிராமத்தில் வீட்டு வேலைகள். வேலை முடிந்து திரும்பும் போது தலையிலோ இடுப்பிலோ தண்ணீர்க் குடம் இருக்கும். அங்கிருந்துதான் இங்கே குடிதண்ணீர் வரவேண்டும்.

சின்னப் பெண்ணாக இருந்தபோது மும்தாஜிடம் வேலைக்குச் சேர்ந்தவள் ஆயிஷா. அவளுடைய வளர்ச்சியை இருவருமே பார்த்து வந்திருக்கிறார்கள்.

''ஆயிஷா இங்கே வந்து சேர்ந்தப்போ என் இடுப்பு உயரத்துக்குக்கூட இல்லே. சமைஞ்ச பிறகு எப்படி மாறிட்டா பார்த்தீங்களா? என் உயரத்துக்கு வந்திருக்கா...சீக்கிரமே கலியாணம் பண்ணி வைக்கச் சொல்லுவாபோல இருக்கு...''

—மூசாவிடம் விவரித்து, பல முறை மூக்கின் மேல் விரலை வைத்திருக்கிறாள் மும்தாஜ். ஆயிஷாவின் வளர்ச்சி அப்படித்தான் இருந்தது.

''ஆயிஷாவைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?'
— இடையிடையே மும்தாஜ் கேட்பாள்.

''நீ என்ன நினைக்கிறியோ அதுதான் என்னோட கருத்து... எனக்குன்னு ஒரு தனி நினைப்பு ஏது முமு?''

''வயசுக்கு வந்த பொண்ணு தினமும் தண்ணிக் குடத்தை எடுத்துக்கிட்டு போறது என்னமோ போல இருக்கு. நல்லவங்க



கெட்டவங்க அத்தினி பேர் கண்ணும் அவமேலேதான் படியுது. நினைச்சா எனக்கே கூச்சமா இருக்கு ..''

''என்ன செய்யச் சொல்றே? வீட்டோட வச்சுக்கப் போறியா?''

''ஆயிஷா மாதிரி இன்னொருத்தி கிடைக்கிறது அபூர்வம். அதான் யோசிக்கிறேன்.''

''யோசிக்கிறத்துக்கு என்ன இருக்கு? அது அது நேரம் வர்றப்ப நடக்கும்'' என்றான் மூசா.

இப்பொழுது நேரம் வந்துவிட்டதா என்ன? அதுவும் அவள் நெஞ்சிலேயே நெருப்பை மூட்டுகிற மாதிரி.

மும்தாஜின் எண்ண ஓட்டம் இப்படி இருந்தது.

எதிர்பார்த்ததற்கு மேலாகவே செலவாகிக் கொண்டிருந்தது. முந்திரிமேடு மாதிரி ஒரு புஞ்சைக் கரட்டில் கிணறு தோண்டுவதற்கு இதற்கு மேலும் ஆகலாம். செலவைப் பற்றி மூசா கவலைப்படவில்லை. பலன் கிடைக்க வேண்டும்......

அடி நீரோட்டமாக மனசில் ஓர் அச்சம் மட்டும் இருக்கிறது. மனைவியைப் பற்றிய பீதி அது.

எந்தத் துணிச்சல்லே ஆயிரம் ஆயிரமா கொண்டுகிட்டுப் போய்க் கிணத்திலே கொட்டுறீங்க? — அவள் எப்பொழுதோ கேட்டிருப்பாள். கேட்கக் கூடியவள். இன்னும் கேட்கவில்லை. கேட்காமல், விடமாட்டாள். கேட்க முடியாதபடி ஓர் அடைப்பு; தடை. அதை விலக்கிவிட்டு விசாரணை நடத்தவே தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது. ஆமாம், அப்படி நடக்கலாம்.

அந்த சமயத்தில் மும்தாஜ் எப்படி வெடித்துக் குமுறுவாள் என்பதை அவனால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. எப்பொழுதுமே அவள் குரலும், கரமும் வீட்டில் ஓங்கியிருக்கும். மூசாவுக்குப் பதினைந்து வருஷ அனுபவம்.

''மும்தாஜ் ரொம்ப அழகான பெண். ரோஜாப்பூ மாதிரி... அவளைக் கட்டிக்க எத்தனையோ பேர் போட்டி

போடருங்க, ஆனு, 'உனக்கு மும்தாஜைக் கொடுக்க விரும்
புறுங்க.. நீ படிச்ச பிள்ளேங்கிறதுதான் காரணமாம்...''

— அம்மா ஒரு நாள் சொன்னுள்.

மூசாவுக்கு அது தெரியும். மும்தாஜையும் தெரியும். உள்
ளூரில் கல்யாணம் பண்ணிக் கொள்வதானுல் அவள் ஒருத்தி
தான் தனக்குப் பொருத்தமானவள் என்பது மூசாவின்
கணிப்பு. இவன் பட்டதாரி. அவள் பண வசதியுள்ள அழகி.
பொருத்தமான ஜோடி என்று பார்க்கிறவர்கள் பூரிக்கிற
மாதிரிதான் அவனும் அவளும்.

மும்தாஜ் ஒரு ரோஜாப்பூ என்று அம்மா சொன்னது
எத்தனே பொருத்தம்! ஆரம்பத்திலேயே அனுபவித்து
உணர்ந்தான் மூசா. முகமும் இதழும், மேனியும் ரோஜா
தான். கண்களில் அதிதமான ஒரு கவர்ச்சி கிடைக்க முடி
யாத செல்வ சுகம் மும்தாஜின் உருவில் தனக்குக் கிடைத்
திருப்பதாக அவன் பூரித்துப் போனுன். 'மூசாவின் இரண்
டெழுத்துப் படிப்புக்கு எவ்வளவு பெரிய லாட்டரி அடிச்
சிருக்கு' என்று சிலர் வாயைப் பிளந்தார்கள்.

மும்தாஜை நேருக்கு நேராக நிமிர்ந்து பார்க்கக் கொஞ்ச
காலம்வரை மூசா கூசினுன். கவர்ச்சியும் மிடுக்கும் அப்படி...

''கூச்சம் தெளியனுமின்னு நாம நாலு இடங்களுக்குப்
பயணம் போயிட்டு வரணும். என்ன சொல்றீங்க?''

''உன் இஷ்டம், மூமூ!''

''அப்ப ரெண்டு பேருமா எங்கேயாச்சும் போயிட்டு
வருவோமா?''

''அம்மாகிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு...''—அவன்
இழுத்தான்.

இளம் மனேவி சிரித்தாள்.

மருமகள் விருப்பத்துக்கு அங்கிகாரம் அளித்து மகனே
நிமிர்த்திவிட்டாள் தாய்.

''அம்மா மேலே ரொம்ப பக்தி இல்லையா, உங்களுக்கு?
அடக்குமின்னு இப்புடி ஒரு அடக்கமா அம்மாகிட்டே!''



என்று மும்தாஜ் சிரித்தாளே, அது அவன் மனசில் பசுமை
யாக இருக்கிறது. 'நீங்கள் எனக்குத்தான் அடக்கம்' என்று
சொல்கிற மாதிரி அல்லவா சிரித்தாள்!

வருடத்திற்கு இரண்டு முறை சுகவாசப் பயணம் போக
வேண்டும். அது மும்தாஜின் நிரந்தர ஆணை. செலவுக்கு
ஆயிரமும் இரண்டாயிரமுமாக எடுத்துக் கொடுப்பாள். தட்ட
முடியாது. மகன் தவித்த சமயங்களில், 'மூமூ ஒரு ரோஜாப்பூ.
அது வாடக் கூடாது மகனே!'' என்று தட்டிக் கொடுப்பாள்
அம்மா.

'ரோஜாப்பூ என்று நீ அன்றைக்கே சொன்னது எத்தனே
பெரிய உண்மை! இந்தப் பூவைச் சுற்றி முள்ளும் இருக்
கிறது. அது தைக்கிறதே, என்ன செய்யட்டும் அம்மா?'–
இப்படி எதுவும் கேட்க முடியாதபடி மூசா வாயடைத்துப்
போயிருக்கிறுன்.

வயது முதிர்ச்சியினுல் மூசாவின் அம்மா அடிக்கடி பாயில்
விழுந்து கொண்டிருந்தாள்.

''இந்தவிசை நாம் கொஞ்சம் தொலே தூரமான இடத்
துக்குப் பிரயாணம் செய்திட்டு வரணும்...'' —பயணத்திட்
டத்தை மனேவி விவரித்தபோது—

''இப்ப நாம் கிளம்பிப் போறது நல்லதில்லே மூமூ.
அம்மா படுத்த படுக்கையா இருக்கிறுங்களே?''

''சொல்லுவீங்களே. . நான் ஆசைப்பட்டுடக் கூடாது!
நான் அங்கே இங்கே போகணுமின்னு உங்க தாய்ப்
பாசம் குறுக்கே வந்திடுது, இல்லையா?''

''இது மாதிரி நேரத்திலே தாயின் பக்கத்திலே பிள்ளே
இல்லேன்னு...''

—கணவனின் பேச்சு அவளேச் சமாதனப் படுத்தவில்லே.

''மூசா, அது சின்னஞ்சிறுசு.. எனக் கென்னப்பா, நான்
பழுத்த இலே...காம்பு இத்து ஒரு நாள் விளுந்திட வேண்டி
யவ, இல்லையா? மும்தாஜை, அது ஆசைப்படுற இடத்துக்
குக் கூட்டிக்கிட்டுப்போ...'' அவர்களின் உல்லாசப் பயணத்

திற்குக் கொடி காட்டினாள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தாய்.

''உங்க அம்மாவை ஒண்ணும் தனியா விட்டுட்டுப் போக வேணும். ஆயிஷா குட்டியைப் பக்கத்திலே வச்சிட்டுத் தான் போறோம். அந்தக் குட்டி இவங்களைக் கவனிச்சிக்கும்...''

ஆமாம். முந்திரிமேட்டு ஆயிஷாதான் அந்தத் தாயின் பக்கத்தில் இருந்தாள், உயிர் பிரியும் நேரத்தில்கூட.

கிணறு வெட்டியாகி விட்டது.

சிலர் சிரித்தார்கள், ஒன்றுக்கும் உதவாத கரட்டில் கிணறு வெட்டுகிறானே என்று.

மும்தாஜும் முதலில் சிரித்தாள்:

''முந்திரிமேட்டில் கிணறு தோண்டி ரோஜாத் தோட்டம் போடப் போறீங்களாக்கும்!''

''ரோஜா அங்கேயும் பூக்கலாம் முமு!''

''பூக்கும்.. பூக்கும்!'' என்று இளப்பமாக, ஏளனமாகத் தலையாட்டினாள்.

இப்பொழுது அவள் முகம் கொடுத்துப் பேசுவது குறைந்து போயிருக்கிறது. தன் விருப்பத்திற்குப் புறம்பாக வேண்டாத இடத்தில் கிணறு வெட்டியிருக்கிறான் என்பது மட்டும் காரணமல்ல. ஆயிஷா என்ற வேலைக்காரப் பெண்ணுக்காக ஆசையோடு அந்தக் கிணறு தோண்டப்பட்டிருக்கிறது என்பதுதான் அடித்தளமோ?

''நீயா?'' என்று நிமிர்ந்த மும்தாஜ், நிமிஷத்தில் சப்பாத்திப் பழமாகச் சிவந்தாள். எதிரே ஆயிஷா நின்றிருந்தாள்.

''உங்களைப் பார்க்காமெ இருக்க முடியலே!''—ஆயிஷா நெகிழ்ந்தாள்.

'என்னைப் பார்க்க வ்ரலேடி நீ.. அவரைப் பார்க்கறதுக்கும் வீடு தேடி வர வேண்டியதில்லையே! முந்திரிமேட்டிலேயே முடக்கிப் போட்டுக்க வேண்டியதுதானே! அதுக்கு



அனுமதி கேட்க வந்திருக்கிறீயோ? போ... முந்திரிமேட்டே கதின்னு கிடக்கிறவர் கிட்டேயே போ..'—மும்தாஜ் சொல்லவில்லை. சொல்ல வேண்டும் போல் உள்ளுக்குள் புழுக்கம்.

''இத்தினி வருஷமா இந்த வீட்டையே சுத்திச் சுத்தி வந்தேன். இப்ப கையும் காலும் ஒடிஞ்சாப் போல இருக்கு. இந்த வாசலை நான் மிதிக்கக் கூடாதுண்டு சொல்றபடிக்கு நான் என்ன குத்தம் செஞ்சிட்டேன். சொல்லுங்க. சொல்லுங்க ?''

—ஆயிஷா கண்ணீரைப் பிழிந்தாள். பார்ப்பதற்குக் கஷ்டமாக இருந்தது. வீட்டிலிருந்து வெளியேற்றிய இந்தச் சில வாரங்களில் அவள் உருமாறிப் போயிருக்கிறாள். கவலை அவளை உருக்கியிருக்கிறதோ?

'நம்பமாட்டேன். இது நிஜக் கண்ணீர் அல்ல. நீலிக் கண்ணீர்! போலிக் கண்ணீர்!'

''முந்திரிமேட்டிலே அவங்க வேகிற வெய்யில்லே நாள் பூரா உட்கார்ந்திருக்கிறதைப் பார்க்க மனசு கேக்கலே!''

'கஷ்டமா இருந்தா உன் குச்சு வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போறதுதானே...'

—அவளைக் கொத்திப் பிடுங்குகிற மாதிரி இப்படி ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டும் என்ற துடிப்பு. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் மும்தாஜ்.

''இவ்வளவு கஷ்டப்பட்டு அண்ணன் கிணறு வெட்டுறாங்களே எதுக்குன்னு தெரியாமெ இருந்தது. இன்னிக்குத் தான் புரிஞ்சது. அதை அவங்களே கிணத்தடியிலே செதுக்கி வச்சிருக்காங்க!''

— ஆயிஷா சொன்னதுதான் தாமதம். மும்தாஜ் துள்ளி நிமிர்ந்தாள். 'அண்ணன் என்று முறை கொண்டாடுகிறாளே! ஏதோ காரணம் என்கிறாளே!'

''சொல்லு ஆயிஷா, சொல்லு...'' என்றவாறு அணுகி வந்தாள் மும்தாஜ்.

வீட்டுக்குத் திரும்பிய கணவனின் எதிரே நின்றாள் மும்தாஜ். அவள் விசாரணை நடத்தப் போகிறாள் என்பது மூசாவுக்குப் புரிந்துவிட்டது.

''கிணறு வேலை முடிஞ்சிட்டது இல்லையா?''

''ஆமாம். மும்தாஜ்...ஊத்துக் கன் திறந்து தண்ணி நல்லா வருது. சுத்துச் சுவரெல்லாம் கட்டியாச்சு!''

''காரணத்தை இதுவரைக்கும் என்கிட்டே சொல்லலை... அதை மூடி மறைச்சி...''

''மும்மு, நீ என்ன நினைப்பியோ...என் மனசை அறுத்துக்கிட்டிருந்த குறையை இப்ப சொல்றேன். உன்னை அடையறதுக்கு முன்னாடிவரைக்கும் அம்மாதான் என் உலகம். நம்ம கல்யாணத்துக்குப் பிறகு நான் அம்மாவை சரியா கவனிக்கலேங்கிற குறை சதா என்னைக் குத்திக் கிட்டே இருந்தது. ஆனா, உன் பேச்சைத் தட்ட முடியாமெ நீ இழுத்த இழுப்புக் கெல்லாம் வந்தேன். அதனாலே அம்மா ஒரு அனாதைமாதிரி மரிச்சுப்போனாங்க!''

மும்தாஜ் வாய் திறக்கவில்லை.

''அந்திம காலத்திலே ஒரு தாய்க்குச் செய்ய வேண்டிய கடமையை நான் செய்யத் தவறிட்டேன். அவங்களுக்காக நான் எவ்வளவோ தான தர்மம் செய்யக் கடமைப்பட்டவன். ஒருத்தர் இறந்த பிறகும் அவங்க பேர்லே தான தர்மம் செய்யலாம், இல்லையா?''

மும்தாஜ் கண் கொட்டவில்லை.

''இறந்து போன தாயாருக்குச் செய்யக்கூடிய மேலான தர்மம் எதுன்னு நபிகள் நாயகத்தை ஸஃது என்பவர் கேட்டார். 'தண்ணீர்' என்று நாயகம் சொன்னாங்களாம். அவர் ஒரு கிணறு தோண்டி இது தன் அன்னையுடையது என்று எழுதி வைத்தாராம். பாசக் கிணறான என் அம்மாவுக்காகத்தான், தண்ணீர் வசதியில்லாத அந்த இடத்திலே நான் கிணறு வெட்டியிருக்கேன், மும்மு!'' என்றான் அவன்.

மும்தாஜின் கண்கள் முதல் முறையாக இப்பொழுது கலங்கின.

— ஆனந்த விகடன் 1978



# சாயல் 8

'செவப்பா இருக்கிற புருஷன்—பெண்டாட்டிக்குக் கறுப்புப் புள்ளை பொறக்குமாங்காட்டியும்?' — கிராமத்துப் பெண்டு பிள்ளைகளின் சம்சயம் இது.

'சபியா பொண்ணு, உரிச்ச கோழி நெறத்திலே இருக்கு. நம்ம ஷரீபு தம்பியோட நெறம் உளுவை மீனாட்டம். இவுகளுக்குப் போயி வரால் குட்டி மாதிரி பொறந்திருக்கே ஒரு புள்ளை. அல்லாவோட 'குதரத்'தா இல்லே இருக்கு!'

— மீன்கார காதர்பாட்சாவின் மனைவி கதீசா, தனக்குப் பட்டதைச் சொல்லி விட்டுப் போகிறாள். தினமும் நாலு பேராவது குழந்தையைப் பார்க்க வருகிறார்கள். வியப்பில் இரண்டு வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

சபியா மௌனம் சாதிக்கிறாள். அவளுக்கு அது தலைச்சன். தாய் வீட்டிலிருந்து குழந்தையோடு வந்திருப்பவளை மாமியார் எப்படிக் கவனிக்க வேண்டுமோ அப்படி கவனிக்கவில்லை. குழந்தையை முதல் முறையாகப் பார்த்துவிட்டு முகத்தை எட்டு கோணலாக்கிக் கொண்டவள் இன்னும் நிமிர்த்தவில்லை. மருமகள் காதில் படுகிற மாதிரி சதா முணுமுணுத்துக் கொண்டிருக்கிறாள்:

'அல்லாவே, அவரைக்கொடியிலே துவரை காய்ச்ச மாதிரில்ல இருக்கு. வம்ச வம்சமா இல்லாதபடிக்கு இப்புடி ஒரு கரிக்கட்டையை புள்ளேண்டு குடுத்திருக்கிறியே... இந்த ஊட்டு வாரிசிண்டு எப்புடி நம்புவேன், ரகுமானே!'

மாமியாரின் ஆற்றாமை சபியாவுக்கு உறைக்கிறது. வாய் திறக்க வேண்டுமே; இல்லை.

குழந்தையின் நிறம் கறுப்பு. சாயல், சம்பந்தமில்லாமல் இருக்கிறது. தாயைப் போலவும் இல்லை; தகப்பனைப் போல

வும் இல்லை. பார்க்கிறவர்கள் ஒருமித்த குரலில் விமரிசித்து விட்டுப் போகிறார்கள்.

பிள்ளையைப் பார்க்க வேண்டிய தகப்பன் இன்னும் வரவில்லை. இன்றோ நாளையோ ஷரீப் வரப் போகிறான். பெரிய பிரசங்கி, வாரக்கணக்கில், மாதக் கணக்கில் வெளியூர்களில் பிரசங்கம் செய்வதே வேலையாகப் போய்விட்டது அவனுக்கு.

இந்த முறை ஷரீப் வீட்டை விட்டுக் கிளம்பி இரண்டு மாதம் ஆகிறது. மகன் பிறந்த செய்திக்கு ஒரு கடிதம் போட்டார்கள். மகிழ்ச்சி தெரிவித்துப் பதில் எழுதியிருந்தான். 'முக்கியமான தொடர் பிரசங்கம் என்பதால் உடனே புறப்பட்டு வரமுடியவில்லை' என்று சபியாவுக்குத் தனிப்பட தெரிவித்திருந்தான். தான் வந்ததும் மகனுக்குப் பெயர் சூட்டு விழா நடத்தலாம் என்றும் குறிப்பிட்டிருந்தான்.

அவன் வரப் போகிறான். மகனைப் பார்த்ததும் என்ன சொல்வான்?

'என்னைப் போலவும் இல்லை. உன்னைப் போலவும் இல்லையே சபியா? இது என்ன நிறத்தில் சேர்த்தி?' என்று மற்றவர்களைப் போல சந்தேகக் கணை தொடுப்பானோ!

மற்றவர்களுக்குப் பதில் சொல்லாமல் இருக்கலாம். கணவன் கேட்டால்...? ஷரீப் நூறு கேள்வி கேட்கலாம். அவன் சுபாவமும் தோரணையும் சபியாவுக்குத் தெரியும். எதையும் விளக்கமாகப் பேசுவான்; கேட்பான்.

அவள் சில முறை குறும்பாகக் கேட்டிருக்கிறாள்—

''பெண்டாட்டிகிட்டே பேசுறப்பகூட நீங்க பிரசங்கியா மாறிடுறீகளே!''

''நான் ஒன்னை சந்திச்சதே பிரசங்கியாத்தானே, சபியா! பெண்டுக கூட்டத்திலே முன்வரிசையிலே உக்காந்து தெறந்த வாயை மூடாமெ நீ என்னோட பேச்சைக் கேக்கலையா? அத்தனை பெண்டுக மத்தியிலே ஒன்னை மட்டும் நான் புடிச்சேனே அதுதான் ஆச்சரியம்'' என்பான் ஷரீப்.

அவர்கள் சந்திக்க நேர்ந்தது அப்படித்தான். சபியாவின் கிராமத்தில் அவன் ஒரு மாதம் புராணப் பிரசங்கம் செய்த



போது ஏற்பட்ட சந்திப்பு. ஒரு நாள் சபியா வீட்டிற்குச் சாப்பிடப் போனான் பார்வைகள் சங்கமிக்க, வாழ்க்கையிலும் ஒன்று கலந்துவிட்டார்கள். அதெல்லாம் இரண்டு வருஷத்துக்கு முந்திய நடப்பு.

தலைச்சன் குழந்தை பிறந்திருக்கிறது. கறுப்புக் குழந்தை. வித்தியாசமான சாயல்.

சந்தேகம், மாமியாரைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. சபியா புரிந்து கொண்டு விட்டாள். கணவனுக்கு அந்தச் சந்தேகம் ஏற்படாமல் போகும் என்பது என்ன நிச்சயம்?

சபியா மருண்டு போயிருக்கிறாள். குழந்தையை வெறித்துப் பார்த்தபடி வெகு நேரம் தன்னை மறந்து உட்கார்ந்து விடுகிறாள்.

ஷரீப் வந்துவிட்டான்.

ஆவலோடு தொட்டுத் தூக்கி, அள்ளி அணைத்து, சீராட்டிப் பாராட்ட வேண்டும் என்று மனம் கொள்ளாத கற்பனைகளுடன் குழந்தையைப் பார்க்க வந்தவன் மறு நாளே முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

சபியா பயந்த மாதிரியே எல்லாம் நடக்கிறது. ஷரீப் அவளை அடுக்கடுக்காகக் கேள்வி கேட்கவில்லை. துருவித் துருவி விசாரிக்கவில்லை. அவனுடைய மௌனமான பார்வையே அவளைத் துரப்பணமிட்டது.

''நீ ஊர் ஊரா சுத்தப் போயிடுறே... அதுக்குக் கை மேலே பலன் கிடைச்சிருக்கு'' என்று சூசகமாக மகனிடம் சொல்லிக் காட்டுகிறாள், சபியாவின் மாமியார்.

இதற்கு என்ன அர்த்தம்? வந்தவன் நிம்மதியாக இருக்க முடியவில்லை. சபியாவின் நிலைமையும் அதுதான். குழந்தையைப் பார்த்தவர்கள் என்னென்ன சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள் என்பது அவன் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அம்மாவின் அங்கலாய்ப்பு, ஆற்றாமையில் பாதி இப்பொழுது ஷரீபுக்கு வந்து விட்டது.

''நீ ஊர் சுத்தப் போயிடுறே. அப்பல்லாம் உன் பெண்
டாட்டி தாய் ஊடுண்டு போயிடுறு... ஒரு விசையா, ரெண்டு
விசையா... எதுக்காக நீ போறேண்டு நான் கேக்க முடியு
மாப்பா? சமயா சமயத்திலே அவ சொந்தக்காரங் கண்டு
யாராச்கும் வர்ருங்க...சொந்த பந்தமிண்டு விடலே விடலையா
தலைக்கொசந்தவனுங்க உள்ள குடும்பமாம்... எந்தப் புத்திலே
எந்தப் பாம்பு இருக்குமிண்டு யார் கண்டதுங்கிறேன்......?''
— அம்மா அவனைக் கொத்திக் கொண்டிருக்கிறாள்.
சபியா துவண்டு விட்டாள்.

'இதற்கெல்லாம் உன் பதில் என்ன?' என்று அவளை
ஷரீப் கேட்கலாம். கேட்கவில்லை. சந்தேகச் சூருவளி சுழன்று
கொண்டிருக்கிறதோ?

நெஞ்சு கொள்ளாத குறுகுறுப்பில் நிலைகுலைந்திருக்கிறான்
சபியா. அவனுக்கு அவள் என்ன பதில் சொல்ல முடியும்?

'அல்லாவே, நீதான் கிருபை செய்யணும். அறிஞ்சோ
அறியாமியோ நான் செஞ்ச குத்தம் குறைகளையெல்லாம்
நீதான் பொறுத்துக்கணும். எங்களுக்கு நல்ல வழி காட்டு
அல்லாவே!' — சபியாவின் கண்ணும் மனமும் கசிகின்றன.

சதா முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்
கிறான் ஷரீப்.

சந்தேகச் சாயல் அழுத்தமாகத் தடம் பதித்துக் கொண்
டிருக்கிறது. ஆற்றொழுக்காகப் பிரசங்கம் செய்கிறவனின்
வாய் அடைபட்டுப் போயிருக்கிறது.

காரணம்—

குழந்தையின் நிறம்......சாயல்?

சபியாவின் மௌனம்?

தாய் போடுகிற தூபம்?

'தூபம் என்று எப்படிச் சொல்ல முடியும்? தீர்க்கமான
உண்மையாக அது இருக்கக்கூடாதா? அம்மா சொல்கிற
மாதிரி சபியா அடிக்கடி தாய் வீட்டுக்குப் போகிறவள்தான்.
அவள் குடும்பத்தில் விடலைகளான முறைப் பையன்கள் இருக்



கத்தான் இருக்கிறார்கள். எதுவும் நடந்திருக்கலாம்.' — மனக்
குரல் ஒவ்வொரு சமயம் எதிரொலிக்கிறது.

சபியா அவனுக்கு உரிமையான அந்தப் புதிய நாட்களில்
ஷரீப் கேட்டிருக்கிறான்;

''சொந்தத்திலேயே உனக்கு மாப்பிள்ளைப் பையன்கள்
இருக்கிறப்ப என்னைக் கட்டிக்க எதுக்கு சம்மதிச்சே, சபியா?''

''ஊர் ஊரா பயணம் போற நீங்க வேறு யாரையும்
ஏத்துக்காம என்னியே முடிச்சிருக்கீங்களே, எதுக்காக?''

''ஓ! நீ இப்படித் திருப்புறியா?''

''அது அது அல்லாவுடைய நாட்டப்படிக்கு நடக்குது.
இல்லேண்டா நாம ஒண்ணு சேர்ந்திருப்பமா?

''அப்ப, உன் மச்சான்மார்கள்லே யாரையும் புருஷனு
அடையலேங்கிற மனக்குறை உனக்கு இல்லையா, சபியா?''

''நீங்க என்ன பேச்சுப் பேசுறீங்க? இப்புடியெல்லாம்
நீங்க பேசினு எனக்கு கெட்ட கோவம் வரும்... எனக்கும்
குறை இல்லே...அவங்கள்லே யாருக்கும் குறை இல்லே...என்
பேர்லே எல்லாருக்குமே பிரியம். சின்ன வயசிலேருந்து மச்
சான்மார்களோட ஒண்ணு விளையாடி, விகல்பமில்லாமெ
பளகி வந்திருக்கோம். ....''

''ஆனுக்கா, அவங்கள்லே யாரும் என்னை மாதிரி செவப்பா
இல்லே...கறுப்பு மச்சான்களா இருக்காங்கண்டு வெறுப்பு
உண்டா இல்லையா?''

''நீ செவப்பா இருந்தபடியினுலேதான் பெண்டுங்க
கூட்டத்திலே பளிச்சிண்டு பார்வையிலே தெரிஞ்சே!''

''யார் கண்டாங்க? போற ஊர்லேயெல்லாம் பெண்டுக
கூட்டத்தை அலசிப்பாப்பீங்க போல.....அப்புடிப் பார்த்தீங்
கண்டா ஆபத்தாபோயிடும்!'' என்றான் குறும்பாக.

''யாருக்கு? ஒனக்கா, எனக்கா?''

''!ரெண்டு பேருக்குந்தான்!''

இப்பொழுது ஏற்பட்டிருப்பது ஆபத்துதான். ஆனால் இதன் சாயல் வேறு விதமானது. நிறம் இத்தனை பூதாகாரமான பிரச்னையைக் கொண்டு வருமா, என்ன?

கொண்டு வந்துவிட்டது.

'இது என் குழந்தை என்று சத்தியம் செய்தால்கூட யாரும் நம்ப மாட்டார்கள். எத்தனை வித்தியாசம்! எத்தனை பேதம்!' என்று அலையாய், பொங்கி நுரைக்கிறது ஷரீபின் நெஞ்சம்.

அவ்வப்போது கேட்கும் குழந்தையின் அழுகுரல் மட்டுமே அந்த வீட்டில் ஒரு கறுப்பு குழந்தை—ஷரீபின் மகன்—இருப்பதை நினைவுறுத்திக் கொண்டிருக்கிறது.

''தெனைக்கும் இப்புடியே உட்காந்திருந்தா என்ன ஆவப் போவுது? மனசிலே என்னத்தை வச்சிருக்கே மவனே?'' என்று உசுப்பி விடுகிறாள் தாய்.

''நான் பிரயாணம் கிளம்பப் போகிறேன். லெட்டர் மேலே லெட்டர் வந்துகிட்டே யிருக்கு. நாலு ஊருக்குப் போனா மனசு கொஞ்சம்...''

— ஷரீப் தழுதழுக்கிறான்.

''புள்ளைக்கி எப்ப பேர் வைக்கப் போறீங்கண்டு ஊர்க்காரங்க கேக்குறாங்களே, என்னத்தை செய்றதா நெனைப்பு?''

அம்மாவின் கேள்விக்கு அவன் பதில் சொல்லவில்லை.

''நீபாட்டுக்கு நாடோடியாட்டம் கிளம்பிப் போயிட்டா நடக்கிறதை யாரு கவனிப்பாங்க? செய்யுறதை ஒளுங்கா, மொறையா செய்து போட்டுப் போ.''

தாய்க்காரி என்ன சொல்கிறாள், எதைக் கருதுகிறாள் என்று அவனால் முடிவுகட்ட முடியவில்லை.

சபியாவும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாள். அவளுக்கு உறைக்கிறது. உடலெல்லாம் எரிகிறது.

'அல்லாவே, அறிஞ்சோ அறியாமியோ செய்த குத்தங் குறைகளை நீதான் பொறுத்துக்கணும். எங்களுக்கு நல்ல வழி காட்டு அல்லாவே!'



குழந்தையைப் பார்க்கிற பொழுதெல்லாம் அழுகை நெஞ்சை அடைக்கிறது, கண்ணீர் முட்டிக் கொண்டு வருகிறது.

ஷரீப் பயணத்துக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான். இந்தச் சில தினங்களுக்குள் வெவ்வேறு ஊர்களிலிருந்து அழைப்புக் கடிதங்கள் வந்திருப்பது சபியாவுக்குத் தெரியும்.

அவன் போவதில் அவளுக்கு வருத்தம் இல்லை. ஆனால் வழக்கம் போல் அவளிடம் மனம் விட்டுச் சிரித்துப் பேச மாட்டானா? பிள்ளைக்குப் பெயர் வைக்கப் போவதாக வரிந்து வரிந்து எழுதியவன் ஒப்புக்காகவாவது அதைப் பற்றி ஒரு வார்த்தை பேசக்கூடாதா?

'இந்த முறை இன்ன ஊரில் இன்னின்ன பேசுவேன்' என்று சபியாவிடம் அவன் உற்சாகமாகச் சொல்வது வழக்கம். அவளிடமும் சில கருத்துகளைக் கேட்பான். பெண்களுக்குப் பிடிக்கிற மாதிரி பேசுவதற்கு அவளுடைய யோசனைகள் உதவியாக இருக்கும்.

இப்பொழுது தலைகீழ் நிலைமை. சபியாவிடம் முகம் கொடுக்கவில்லை. குற்ற உணர்ச்சியின் பாதிப்புக்கு இலக்கானவள் போல் அவளும் தலை நிமிரவில்லை.

அந்த மௌனத்தை அழித்தே தீர்வது என்று உறுதியெடுத்துக் கொண்ட மாதிரி சபியா, கணவனிடம் வந்தாள்.

''பயணம் புறப்படுறியளாக்கும்?'' — சபியா சன்னக் குரலில் பேச்சுக் கொடுக்கிறாள்.

'ஆமாம்' என்று ஷரீப் தலையை ஆட்டினாலும் கவனம் அவள்மீது இல்லை.

''நீங்க ஒண்ணும் கேக்கலையே!''

''என்னத்தைக் கேக்கப் போறேன்?''

''எதனைச்சும் சொல்லச் சொல்லுவிகளே, ஒவ்வொரு விசையும்.''

''சொல்லணுமிண்டா சொல்லேன்.''

''றசூலுல்லா நபிகளோட ஒரு ஹதீஸ் படிச்சேன். போற எடத்துலே ஒங்க பிரசங்கத்துக்கு ஒதவுமாங்காட்டியுமிண்டு......''

ஷரீப் மெல்ல நிமிர்ந்து பார்த்தான். அவள் சொல்வதும் அவன் கேட்பதும் வழக்கம்தான்.

சபியா சொல்லத் தொடங்கினாள்:

''நபிநாயகத்தைப் பாக்க வந்த ஒருத்தர் தனக்குக் கறுப்புக் குழந்தை பொறந்திருக்கிறதா சொன்னார். அந்தக் கறுப்புப் பையன் தனக்கு பொறந்திருக்க முடியாதுண்டு வாதாடினார்...''

ஷரீப் செவிகளைத் தீட்டிக்கொண்டான்.

''நாயகம் அவர் சொன்னதை நம்பலே. 'உம்மகிட்டே ஒட்டகம் இருக்காண்டு' கேட்டாங்க. 'ஆமா, இருக்கு' அம்புடீண்டார் வந்தவர். அந்த ஒட்டகத்தோட நெறம் என்னதுண்டு நாயகம் கேட்டப்போ, சிவப்புண்டு சொன்னார்.''— அவள் நிறுத்திவிட்டுக் கணவனை நோட்டமிட்டாள்.

ஷரீபின் விழிகளில் கூர்மையேறியது.

''அந்த செவப்பு நெற ஒட்டகத்திலே எங்கேயாச்சும் வெள்ளை நெறம் கலந்திருக்காண்டு நாயகம் கேட்டாங்க. இருக்கிறதா சொன்னார். சரி, அப்ப செவப்பு ஒட்டகத்திலே வெள்ளை நெறம் எப்புடி வந்திச்சுண்டு நபி வினவினாங்க... வந்தவர் யோசிச்சார்...''

— அவள் நிறுத்தினாள். அவன் யோசித்தான்.

''ஏதாச்சும் நரம்பு வித்தியாசத்தினாலே செவப்பு ஒட்டகத்துக்கு வெள்ளை நெறமும் ஏற்படும்... வேற நெறமும் உண்டாகலாமிண்டு நாயகத்துக்கிட்டே அவர் சொன்னார். 'அது மாதிரிதான் ஒங்க விசயத்திலேயும் நடந்திருக்கும். ஒரு வேளை உங்க மகனுக்கு ஒரு நரம்புதான் அந்த வெதமா செய்திருக்கும் அப்புடீண்டு நாயகம் வெவரிச்சதும் வந்தவர் திருப்தியோட திரும்பிப் போயிட்டார்.....''

சபியா அப்புறம் பேசவில்லை; யோசிக்கவும் இல்லை.

ஷரீபுக்கு மின்சாரம் தாக்கிய மாதிரி இருந்தது.

சபியாமீது சந்தேகமா? உள்ளுக்குள் களங்கம் இருந்தால் இப்படிப் பேச முடியுமா ஒரு பெண்ணால்?

குழந்தையைத் தொட்டுத் தூக்க ஷரீபின் கரங்கள் துறுதுறுத்தன.

''சபியா, நம்ம குழந்தையைத் தூக்கிட்டு வா'' என்றான் அவன்.

— ஆனந்த விகடன், 1978



# இருபது ஆண்டுகளுக்கு முன்....



ஆசிரியர், சிறந்த எழுத்தாளரும், பத்திரிகையாளருமான ஆர். பி. எம். கனி, பி.ஏ., பி.எல்., இஸ்லாமிய இலக்கியக் கருத்தரங்கு ஒன்றில் கூறியதாவது: ''சமீப காலத்தில் எழுதத் தொடங்கியிருப்பினும் தமக்கெனத் தனியானதோர் இடத்தையும், நடையையும் உண்டாக்கிக் கொண்டு வெகு வேகமாக முன்னேறும் ஜே. எம். சாலியும், எம். ஏ. சிறந்த சிறு கதைகள் சிலவற்றைத் தந்துள்ளார். அந்த நாள், முத்துச்சுடர், பசுநுக்கோடு, தங்கம், மரியம் பூ போன்றவை இவரெழுதிய சிறந்த கதைகளாகும்''

''நண்பர் ஜே. எம். சாலி, ஆனந்த விகடன் பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றுகிறார். சுவையான கதைகளை எழுதுகிறார். முஸ்லிம் எழுத்தாளன், தமிழ் நாட்டின் பிற எழுத்தாள மக்களிடையே பிரபலமடையாத அளவுக்கு, பிரபலமடைந்திருக்கிறார்...

''[illegible]'' சென்னை.

## ஜே. எம். சாலியின்

### இஸ்லாமிய நூல்கள்

அல்லாஹ்வின்
திருநாமங்கள் அருமருந்து
மாநபியின் இயற்கை
மருத்துவம்
தமிழகத்து தர்காக்கள்
இஸ்லாமிய தமிழ்க்
காவியங்கள்
அண்ணல் நபி பற்றி
அறிஞர் அண்ணா
தமிழக முஸ்லிம்
சிறுகதைகள்

### ஏனைய நூல்கள்

கனாக் கண்டேன் தோழி...
(தமிழ்நாடு அரசாங்கப்பரிசு
பெற்ற நாவல்)
விலங்கு (சிறுகதைகள்)

### வரலாறுகள் :

புரூஸ் லீ
உலக வீரர் அலி
வீரர் அலியின்
வெற்றிக் கதை
அதிபர் இடி அமீன்
கால்பந்து மன்னன்
பீலே
யாஸிர் அரஃபாத்

இன்னும் பல,
இன்னும் பல!

குழந்தை எழுத்தாளராக அறிமுகமான ஜே.எம். சாலி 1955ம் ஆண்டிலிருந்து எழுதி வருகிறார். தஞ்சை மாவட்டத்தில், இரவாஞ்சேரியைச் சேர்ந்த இவர், எம்.ஏ. பட்டம் பெற்ற பின், ஏழாண்டு காலம் சிங்கப்பூர் 'தமிழ் முரசு' பத்திரிகையில் பணியாற்றினார். பின்பு, பத்தாண்டுகள் 'ஆனந்த விகடன்' உதவி ஆசிரியர் பதவியில் இருந்த அவரை மீண்டும், 1983ம் ஆண்டு ஜனவரியில் 'தமிழ் முரசு'' தன்பால் ஈர்த்துக் கொண்டது.

வி

இந்தியாவி

Developrint, 69, Albion Road, Colombo-9, S...